12 பக்கங்கள் விலை 50 காசு

# நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 16—4—1978 | இதழ் 31

# மிக நெருக்கமாக இருக்கிறேன்

## கலைஞர் கடிதம்


உடன்பிறப்பே,

கழகப் பொதுத்தேர்தலில் ஒரு கட்டம் முடிவுற்று, அடுத்த கட்டத் தேர்தலுக்கான அறிவிப்பினைப் பொதுச்செயலாளர் அவர்கள் வெளியிட்டுள்ளார். ஏப்ரல் 30ஆம் நாள் தொடங்கி, மே திங்கள் 14ஆம் நாள் முடிய — ஒன்றிய, நகர, நகரிய, சென்னையில் பகுதி, ஆகிய கழக அமைப்புக்களுக்கான தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

இதற்கு அடுத்த கட்டம், மாவட்டக் கழகத் தேர்தலாகும். நடந்து முடிந்த முதல் கட்டத் தேர்தலில் கிளைக் கழக நிர்வாகப் பொறுப்புக்களுக்கு வர, பலத்த போட்டிகள் ஆங்காங்கு இருந்தன என்பது நமது கழகத்தின் வலிவையும் பொலிவையும் ஜனநாயகக் கட்டுக்கோப்பையும் உணர்த்துகின்றன என்பதில் துளியும் ஐயமில்லை.

கடும் போட்டிகளின் காரணமாகச் சில இடங்களில் கசப்பு உணர்ச்சிகளும் தலை காட்டியதை நான் மறந்துவிடவில்லை. நடைபெற்றதாகக் கூறப்பட்ட முறைகேடுகள், குறைபாடுகளைத் தலைமைக் கழக அளவில் முறையோடும் அக்கறையோடும் விசாரித்து அவற்றினைச் சீர்ப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பெற்று, ஏற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தலைமைக் கழகத்தின் கவனத்திற்கோ, எனது கவனத்திற்கோ, பொதுச்செயலாளரின் கவனத்திற்கோ கொண்டு வரப்பட்ட பிரச்சினைகளுக்கு, கழகச் சட்ட திட்டங்களின்படியும், தேர்தல் விதிமுறைகளின்படியும் அவ்வப்போது தீர்வுகள் காணப்பட்டுள்ளன,

கழக அமைப்புக்களின் நிர்வாகப் பொறுப்புக்கு வர இயலாமல் வெற்றி வாய்ப்பை இழந்தவர்களில் சிலர், தங்கள் தோல்விக்குக் காரணம் தேடும் வேலையில் ஈடுபட்டு, அதனையே பெரும் பிரச்சினையாக ஆக்கிக்கொண்டு இருப்பது கழகத்திற்கு வலிவூட்டும் காரியமாக அமையாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். பல்லாயிரக்கணக்கான கிளைக் கழக அமைப்புக்களின் தேர்தல்களைத் தலைமையிலிருந்து கவனித்துக் கட்டுப்பாடு குலையாமல் நடத்துவதென்பது எவ்வளவு கடினமான செயல் என்பதை உன்னைப்போன்ற உடன்பிறப்புக்கள் அறியாதவர்கள் அல்ல!



எனவே, வருகிற நகர நகரிய ஒன்றிய, பகுதித் தேர்தல்களிலும் தலைமையின் தாக்கீதுகளுக்கு ஏற்ப கடமை உணர்வும், கண்ணியமும், கட்டுப்பாட்டுத் தன்மையும் சிறிதளவும் மாசு படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பாகும்!

உடன் பிறப்பே! நீ ஒரு வேட்பாளராக இருந்தால்; இதோ நான் சொல்வதை தயவு செய்து மறந்து விடாதே! எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக எந்த முறையை வேண்டுமானாலும் கடைப்பிடிக்கலாம் என்று எண்ணிச் செயல்படாதே! அப்படிச் செயல்படத் தொடங்கினால் கழகத்திற்குள் குழுக்கள் (கோஷ்டி மனப்பான்மை) தோன்றக் கூடும். இப்போதே சில மாவட்டங்களில் தோன்றியிருக்கின்றன. அதனை நான் மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். அந்தக் குழுக்கள், தலைமையிடத்தில் பற்றும் பாசமும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை!

ஆனால், தங்களுக்குள்ளாக சில மாவட்டங்களிலோ, ஒன்றிய, நகர, பகுதிகளிலோ ஒன்றுக்கொன்று மோதிக்கொள்கிற குழுக்களைப் பார்த்து நான் வேதனையுறாமல் இருக்க முடியாது. எதற்கு இந்த மோதல்? ஒரு அமைப்புக்கு நிர்வாகிகளாக வருவதற்கு ஜனநாயகத்தில் இது தவிர்க்க முடியாததுதான்! ஆனால், எதற்கும் ஒரு அளவு இருக்கவேண்டும் அல்லவா? அந்த அளவு மீறப்படுமேயானால் அதற்கு எந்த வகையில் தீர்வு காண வேண்டுமோ அந்த வகையில் தீர்வு காணத் தலைமைக் கழகம் தயங்காது!

எல்லா மலர்களும் கழகச் சோலையில் பூத்த மலர்கள்தான் என்று வெற்றிபெற்றவராயினும் பெறாதவராயினும் நான் கருதுவேன் என்பதை உனக்கு அடிக்கடி கூறியிருக்கிறேன்.


அதனால் யார், எங்கே எந்த அமைப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதில் தலைமைக் கழகம் அக்கறை காட்டாது! காட்டக்கூடாது! ஆனால், வெற்றி பெறுவதற்காக யாரேனும் சில வேட்பாளர்கள் முறையற்றதும், கட்டுப்பாடு குலையக் கூடியதுமான போக்குகளைக் கடைப்பிடித்தால் அப்போது, தலைமை தனிப்பட்ட ஆட்களைவிடக் கட்சியைத்தான் பெரிதாகக் கருதும் என்பதை மறந்துவிடக் கூடாது.

உடன்பிறப்பே! நீ ஒரு வாக்காளராக மட்டும் இருந்தால் நான் குறிப்பிடுவதை உன் நெஞ்சில் குறித்து வைத்துக் கொள்! உன் வாக்கு, சுதந்திரமானது; அதனை யாரும் அடிமையாக்கிக் கொள்ளவிடக் கூடாது! யார், யார், குழுக்களை உருவாக்கினாலும் உன் தயவு இல்லாவிட்டால், அவை இயங்க முடியாது. எனவே நீ, உன் வேலையுண்டு நீயுண்டு என இரு! யார் அழைத்தாலும் இழுத்தாலும் அசைந்து கொடுக்கத் தேவையில்லை.

தேர்தல் நாளன்று உனக்கென்றுள்ள அமைப்பில் நீ யாருக்கு வாக்களித்தால் கட்சியின் இலட்சியமும், உறுதியும், கொள்கையும், கண்ணியமும், கட்டுப்பாடும், காக்கப்படும் என்று உன் மனச்சாட்சி சொல்கிறதோ; அந்த உடன் பிறப்புக்கு வாக்கினை அளித்திடு! அதுதான் நீ செய்யவேண்டிய கடமை! உன்னைப்போல ஒவ்வொரு உடன் பிறப்பும் முடிவு எடுத்து விட்

(2-ம் பக்கம் பார்க்க)

# உடன்பிறப்பே! உன் கவனத்திற்காக!



## தமிழகத் தலைநகர் எடுக்கும் புரட்சிக் கவிஞர் விழா !

தன்மான இயக்கத்தின் தன்னிகரற்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாள் விழா இவ்வாண்டு தமிழகத் தலைநகரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சென்னை மாவட்ட இலக்கிய அணியும், தமிழ் மன்றங்கள் ஒன்றிய பேரவையும் இணைந்து இவ்விழாவினை நடத்துகின்றன!

சென்னைமாநகரில் முதன் முதலாகப் பாவேந்தர் பிறந்த நாளை, பன்னாள் இலக்கிய விழாவாகக் கொண்டாடத் தொடங்கியது தமிழ் மன்றங்கள் ஒன்றிய பேரவையாகும்.

கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து புரட்சிக் கவிஞருக்கு விழா எடுத்து வந்த தமிழ் மன்றங்கள் ஒன்றிய பேரவையையும் இணைத்துக்கொண்டு சென்னை மாவட்ட இலக்கிய அணி இவ்வாண்டு, விழா நடத்த முன்வந்துள்ளது.

மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் விழா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஏப். 9-ஆம் நாள் தொடங்கிய இவ்விழா, ஏப். 29 ஆம் நாள் முடிய நாள்தோறும் நடைபெறுகிறது.

கவியரங்கம், பட்டிமன்றம், இசையரங்கம், கருத்தரங்கம்; திறனாய்வு முதலிய நிகழ்ச்சிகளில், கவிஞர்கள். பேராசிரியர்கள், புலவர் பெருமக்கள் பலரும் பங்கு கொள்கின்றனர்.

புரட்சிக் கவிஞர் விழாவை முன்னிட்டு இசைப் போட்டியும், கவிதைப் போட்டியும் நடைபெறவிருக்கின்றன.

புரட்சிக் கவிஞர் பிறந்த நாளான 29—4—78 அன்று, கழகத் தலைவர் கலைஞர், பொதுச் செயலாளர் பேராசிரியர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். அன்று. கடற்கரையில் உள்ள புரட்சிக் கவிஞர் சிலைக்கு மாலை பணிவிக்கப்படும்.

புரட்சிக் கவிஞர் பிறந்த நாள் விழாவிலேயே சென்னை மாவட்ட இலக்கிய அணியையும், கலைஞர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குக் கலைஞர் பரிசுகள் வழங்குவார்.

தலைநகரில் விழாச் சிறப்புற நடந்தேற நாள்தோறும் ஆங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளிலும், நிறைவு நாள் விழாவிலும் பெருவாரியாகப் பங்கு கொண்டு, பாவேந்தர் புகழ் பரவச் செய்ய வேண்டியது தமிழின மக்களின் நீங்காக் கடமையாகும்

# ‘சோறிட்டவரைச் சுட்டுத்தள்ளு !’

**கு. மா. பாலசுப்பிரமணியம் எம்.எல்.சி.**

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டுபின்செல்பவர்” எனக் குறள் பாடினார் திருவள்ளுவர்— அவர்தான் முதன் முதலாக “உழவரைத்தூண்டி, விட்டவர்!

“காலையிலே வெங்கனலைக் கக்கும் கதிரவனை மாலையிலே மேலை மலைவிழுங்கும் நேரம் வரை, ஒட்டியுலர்ந்த உடலின் உதிரமெல்லாம் கொட்டும் வியர்வையெனச் சோரவிட்டுப் பூமியிலே ஏர் உழுது பண்படுத்தி ஏகமாய் நெல் விளைத்துப் பார் முழுதும் மக்கள் பசிதீரச் சோறூட்டும் அண்ணல் உழவன் அருளாளன், அன்னவனே கண் கண்ட தெய்வமெனக் காண்!”

—இவ்வாறு கால்நூற்றாண்டுக்கு முன்பே கவிதை பாடினேன் — நான் ஒரு சோற்றுப் பேர்வழி!

“உப்பிட்டவரை உள்ளளவும் நினை’ என்று எவனோ, எப்பொழுதோ பழமொழி கூறினான் — அவனும் வெறும் நாக்குருசிக் காரன்!

“சோறிட்டவரைச் சுட்டுத் தள்ளு!” என்று இப்பொழுது உத்தரவிடுகிறார்; இந்தத் திருப்பணிக்குப் போலீஸ் போதாதென்று இராணுவத்தையும் அழைக்கிறார்— அவர்தான் புரட்சித் தலைவர்’...

நிலம்திருத்திப்பாத்திகட்டி நீர்பாய்ச்சிப பறம்படித்து, நெல் விதைத்துக் களையெடுத்து பயிர் வளர்த்துக் கதிர் அறுத்து, பதர் தூற்றிக் களம் குவித்து, முதுகின் எலும்பொடிய மூட்டை சுமந்துவந்து, ஊராருக்கெல்லாம் உண்ணக் கொடுக்கிறவன் உழவன்தான்! ஆனாலும் அவன் செய்வது அக்கிரமம்! வரிப்பாக்கி வைக்கலாமா? வரி வசூலில் கண்டிப்புக் காட்டினால் எதிர்த்துப் பேசலாமா? தடுத்துப் போராடலாமா? அடங்காத செயலினால் அரசாங்கத்தைப் பணிய வைக்க முயற்சி செய்யலாமா? இதற்கும் ஆதரவாக எதிர்க் கட்சியினர் தூண்டிவிடலாமா? —என்றெல்லாம் எகிறிக் குதிக்கிறார் எம். ஜி. ஆர்.!

“என்ன விலை கொடுத்தாலும் சரி! உழவர்களை ஒடுக்கியே தீருவோம்!” என்று உறுதி பூண்டு விட்டது அ.தி.மு.க. அரசு!

இந்தப் பிடிவாதத்தினால் இதுவரையில் கொடுக்கப்பட்ட விலை என்ன? ஏழு உழவர்களின் உயிர்கள்! முப்பதுக்கு மேற்பட்ட போலீசார் படுகாயங்கள்! துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஏழு உயிர்களின் குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் அதாவது முப்பத்தைந்தாயிரம் ரூபாய் படுகாயமுற்ற சுமார் 30 போலீசார்களுக்குத் தலா ஆயிரம்— அதாவது ஏறக்குறைய முப்பதாயிரம் ரூபாய், ஆகமொத்தம் அறுபத்தைந்தாயிரம் ரூபாய்! இதை எம். ஜி ஆர். கருப்புப் பணத்திலிருந்தல்ல, சத்தியா ஸ்டுடியோ லாபத்திலிருந்துமல்ல, பொதுமக்கள்வரிப்பணமான அரசாங்கக் கருவூலத்திலிருந்துதான் கொடுக்கின்றனர்!

இவ்வளவு கடுமையான வரி வசூல் கெடுபிடியாலும், கண்டிப்பான ஜப்தி நடவடிக்கையாலும் இதுவரையில் இந்தஅறுபத்தைந்தாயிரம் ரூபாயாவது வசூலாகி இருக்குமா என்பது கூடச் சந்தேகம் தான்! ஆனாலும். அரசாங்கக் கஜானாவில் கைவைத்தாவது, ஆளுங் கட்சியின் கௌரவப் பிடிவாதம் காப்பாற்றப்படுகிறது! அதாவது வீம்புக்கு... யாரோ ... என்னவோ செய்தான் என்பார்களே! அதே கதை தான்!

“யாராயிருந்தாலும் வரி பாக்கி வைக்கக் கூடாது! கண்டிப்பாக வசூலிக்கத் தான் வேண்டும்!’ என்பது ஆளுங்கட்சியின் கொள்கையாயிருந்தால். அதை நாம் மறுக்க முடியாது! நியாயந்தான்! வரிபாக்கிவைத்துள்ள அயோக்கியன் — மோசக்காரன் — யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கத் தான் வேண்டும். ஜப்தி செய்யத்தான் வேண்டும்!

ஆனால், ஒரு சின்னஞ்சிறு கேள்வி! இப்போது வரி பாக்கி வைத்துள்ளவர்கள்—

உழவர் மட்டுந்தானா’ எம். ஜி ஆருக்கு வரிப்பாக்கியே இல்லையா?

உழவர் வரி பாக்கி ஒரு சில நூறு-அல்லது, ஒரு ஆயிரம்தான் இருக்க முடியும்! எம். ஜி- ஆர். அவர்களுக்கோ, பல ஆண்டுகளாக-பல லட்சங்கள் வரி பாக்கி இருக்கிறதே! அது மட்டும் குற்றமல்லவா? அதை மட்டும் வசூலிக்கவேண்டாமா? அப்படி வசூலிக்கத் தான் வேண்டுமென்றால், உழவர்களின் அற்ப உடைமைகளை ஜப்தி செய்வதற்கு முன்னால், எம். ஜி. ஆரின் ராமாவரம் தோட்டத்தையும், சத்தியா ஸ்டுடியோவையுமல்லவா ஜப்தி செய்ய வேண்டும்?

சட்டத்தின் முன்னால் யாவரும் சமம்! சத்தியா புத்திரருக்கு ஒரு நீதி! சங்கடப்படும் உழவர்களுக்கு வேறு நீதி என்பது சரிதானா?

எம். ஜி. ஆருக்கு ஏராளமான வரி பாக்கி இருப்பதை நான் சொல்லவில்லை; அவரே கூறியிருக்கிறார்! ‘என்னுடைய வரிபாக்கிகளைத் தீர்ப்பதற்கு நான் சினிமாவில் நடித்தால் தான் முடியும்! ஆகையால், நான் முதலமைச்சராக இருந்துகொண்டே சினிமாவில் நடிப்பதற்கும் அனுமதிக்க வேண்டும்’ என்று இந்தியப் பிரதமருக்கே எம். ஜி ஆர். வேண்டுகோள் எழுதியது பகிரங்கமான உண்மை?

எம் ஜி. ஆருடைய வரிப் பாக்கியைத் தீர்ப்பதற்கு மட்டும் அவர் சினிமாவில் நடிக்கத்தான் வேண்டுமென்றால் உழவர்களின் வரி பாக்கியைத் தீர்ப்பதற்கும் அம்மாதிரி வாய்ப்பு வசதிகளை அவர்களுக்கு வழங்கினாலென்ன? எம். ஜி. ஆர். கதாநாயகனாக நடிக்கிறாரென்றால் அதே படங்களில் உழவர்கள் துணை நடிகர்களாகவும் ஸ்டண்டு நடிகர்களாகவும் தோன்றுவதற்கு வாய்ப்பளிக்கலாமே! எம். ஜி ஆர். பல லட்சம் சம்பளம் வாங்கிப் பல லட்சம் வரி பாக்கியைத் தீர்க்கும்போது, உழவர்களும் சில நூறு சம்பளம் வாங்கியே சில நூறு வரி பாக்கிகளைத் தீர்த்துவிட முடியுமே!

இவ்வளவு சுலபமாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழியிருக்கும்போது பாவம் ஏழை உழவர்கள் மீது துப்பாக்கிச் சூடு எதற்கு? இராணுவத்தை அழைப்பது ஏன்? ஆளுங் கட்சிக்கும் அரசு நிர்வாகத்திற்கும் கெட்ட பெயர் தேடிக் கொள்வது தேவைதானா?

“அரசுக்குச் சேரவேண்டிய வரி வசூலில் அப்படியெல்லாம் அவகாசம் தரமுடியாது’ முதலில் பாக்கியைத் தீர்க்க வேண்டும். பிறகு பாடுபட்டுச் சேர்க்க வேண்டும்” என்று எம். ஜி ஆர். கூறுவதானால் அவருக்கு மிகப் பணிவுடன் நான் ஒரு யோசனை கூறுவேன்.

பிள்ளை குட்டியே இல்லாத நீங்கள் முதலில் உங்கள் ஸ்டுடியோவையும், தோட்டத்தையும், பங்களாக்களையும் விற்று வரி பாக்கியைத் தீர்த்த பிறகு படத்தில் நடிக்க ஆரம்பியுங்கள்! அவ்வாறே உழவர்களும் தமது சட்டி பானை ஆடு மாடுகளை ஜப்திக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு உழைத்துச் சம்பாதித்துக் குடும்பம் நடத்தச் சம்மதிப்பார்கள் என்பது உறுதி! ஏனென்றால், அரசு எவ்வழியோ குடிபடையும் அவ்வழிதான்! உங்கள் முகத்தில் கூடை அழுக்கை வைத்துக்கொண்டே பிறர் முதுகிலுள்ள குண்டுமணி அழுக்கைத் துடைப்பதற்கு முயற்சி செய்யவேண்டாம்.

*

## மிக நெருக்கமாக

(முதல் பக்கத் தொடர்ச்சி)

டால், “கோஷ்டி” என்ற தொத்து நோயைத் தொடக்கத்திலேயே பரவ விடாமல் தடுத்து விடலாம்!

நான் பயமுறுத்துகிறேன் என்று எண்ணாதே! ஏனைய கட்சிகளைப் போல பெரிய அளவில் நமது கழகத்தில் குழுப் பூசல்கள் இல்லை ! மிகச் சிறிய அளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பதை மறைக்கக் கூடாதல்லவா ? அந்தக் கோஷ்டிகளை நீ அடையாளம் புரிந்துகொண்டு – அவற்றை ஊக்கப்படுத்தாமல் செயல்படுவாயானால்; கழகத்தின் கண்ணியத்துக்கும் கட்டுப்பாட்டிற்கும் அணுவளவு களங்கமும் வந்து சேராது !

எனவே, கழகப் பொதுத் தேர்தல் என்பது கழகப் பணியாற்ற “நான் முந்தி நீ முந்தி” என்ற நிலையில் அமைய வேண்டுமே யல்லாமல் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு யாரும் ஒரு சிறிதும் இடந்தரலாகாது என்பதை அழுத்தமாகக் கூறிக் கொள்கிறேன்.

“எங்களூரில் எத்தக் கோஷ்டியும் இல்லையே” என்று கூறுகிறாயா; மகிழ்ச்சி! இரட்டிப்பு மகிழ்ச்சி! உன்னைப்போல் உண்மை சொல்கிறவர்களும் உண்டு! இருப்பதை மறைத்து, இழிவாகப் பேசுவோரும் உண்டு! இருவருக்குமே என்மீதும் கழகத்தின் மீதும் தணியாத அன்பு உண்டு! ஆனால் ஒரு சிற்றூர்க் கிளையிலே நடைபெறுகிற நிகழ்ச்சி கூட என் காதிலே விழக் கூடிய அளவுக்கு நான் உன்னோடு மிக நெருக்கமாக இருக்கிறேன் என்பதை மறந்து விடாதே!

அன்புள்ள

# அரசியலும் - சினிமாவும்!

"பேசும் படம்'' வெளியிடும் சிறப்பு மலருக்குக் கட்டுரை யொன்று கேட்டார்கள் கட்டுரை, திரைப்படத் துறையைப் பற்றியதாக இருக்க வேண்டுமென்றும்கூறினர்கள். அதுமட்டுமல்ல; அவர்களே சில கேள்விகளை அனுப்பி, அந்தக் கேள்விகளுக்கு விளக்கமளிக்கும் விதத்தில் கட்டுரை அமைய வேண்டுமெனவும் குறிப்பிட்டார்கள்.

"உலகில் எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்குத் தமிழ் நாட்டில் மட்டும் சினிமாவும், அரசியலும் கலந்திருப்பதின் காரணம் என்ன?' என்பது அவர்கள் தொடுத்துள்ள முதல் கேள்வியாகும். திரைப்பட வாயிலாக அரசியல் கருத்துக்களைச் சொல்வது என்பது இந்திய நாட்டு விடுதலைப் போராட்டம் நடைபெற்ற போதே தொடங்கிய ஒன்றுகும்.

எந்தக் கருத்தினையும் கலைத் துறை வாயிலாக விரிவாகப் பரப்பிவிட முடியும்; நாடு விடுதலை பெற்ற பிறகும் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பகுத்தறிவு இயக்கக் கொள்கைகளும் பல்வேறு அரசியல் கோட்பாடுகளும் கலைத்துறை வாயிலாக—குறிப்பாகவும் சிறப்பாகவும் திரைப்படத் துறை வாயிலாகப் பரப்பப்பெற்றன.

அரசியல் வாதிகள் கலையுலகில் தங்கள் எண்ணங்களை மிதக்க விட்டனர். அதே நேரத்தில் கலையுலகைச் சேர்ந்த சிலரும் அரசியலில் தங்களை இணைத்துக் கொள்வதின் மூலம் ஆதாயம் பெறலாமெனக் கணக்கிட்டனர். (எல்லோருமல்ல). அரசியல் தலைவர்கள், திரைப்படத் துறையைத் தங்கள் அரசியல் இலட்சியங்களுக்குப் பயன்படுத்தியதற்கும், ஒரு சில திரைப்படக் கலைஞர்கள், அரசியல் துறையைத் தங்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தியதற்கும் உள்ள வேறுபாட்டை உணர வேண்டும். வேறு இடங்களைப் போலன்றித் தமிழ்நாட்டு மக்களில் ஒரு பெரும் பகுதியினர் திரைப்படங்களில் தோன்றுகின்ற கதா நாயகர்களை, வாழ்க்கையிலும் அவர்கள் ஏற்றுக்கொண்ட கதா பாத்திரங்களாகவே தங்கள் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டனர்.

இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான நம்பிக்கையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள. குறிப்பிட்ட சில கதா நாயகர்கள் தவறவில்லை. அது அவர்களின் குற்றமல்ல. தானகத் தேடிவரும் இது போன்ற நல் வாய்ப்பினை அவர்கள் எதற்காக நழுவவிட வேண்டும்? இதுபோல ஏற்பட்ட நிலைதான் சினிமாவும் அரசியலும் கலந்துவிட்டநிலை!

நான் சினிமாவையோ, நடிகர்களையோ அல்லது சினிமா மூலம் கொள்கை கோட்பாடுகளைக் கூறுவதையோ எதிர்ப்பவனல்ல, மாருக. ஆதரிப்பவன்.

ஆனல் கருத்துக்கள்பட்டுப் போகவும், தியாகஉணர்வுகள் தியாகச் செயல்கள் பின்னுக்குத் தள்ளப்படவும், வெறுங் கவர்ச்சி மட்டும் பாமர மக்களின் ஆதரவைப் பெறவுமான ஒரு சூழல், எந்தக் காலத்திலும் நல்லதல்ல!

அரசியல் கொள்கைகளைப் பரப்ப சினிமா ஒரு கருவியாக இருப்பதில் தவறில்லை—ஆனல் அரசியலே சினிமாவாக ஆகிவிடுவது ஆரோக்கியமான நிலை அல்ல.

அடுத்த வினு, "தி. மு. கழக ஆட்சியின்போது சினிமாத் தொழிலுக்கும், சினிமாகலைக்கும் போதுமான ஆதரவு கொடுக்கப்பட்டதா? இல்லையேல் அதற்குக் காரணமென்ன? என்பதாகும். திரைப்படச் சுருளுக்கான 'எக்சைஸ் ட்யூட்டி'' போன்ற மத்திய அரசின் வரிகளால் திரைப்பட உலகம் பெரிதும் பாதிக்கப்பட்டது என்பது உண்மை தான்.

அதே நேரத்தில் தி. மு. கழக அரசு படத்துறையின் மீதுவிதித்தவரிகளைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுப்பப்பட்டது. தி.மு.க. அரசு விதித்த வரி ஏற்கனவே இருந்த வரிகளின் தொடர்ச்சியே தவிர புதுமையானதாக ஒன்றுமில்லை. எனினும் வரியைக் குறைக்கவும், அதே நேரத்தில் தியேட்டர்களில் நடைபெறுகின்ற வரி ஏய்ப்பைத் தடுக்கவும் கழக அரசு முயற்சிகளை மேற்கொண்டு அதற்கென அதிகாரிகளும் திரைப்பட அதிபர்களும், விநியோகஸ்தர்களும், திரையரங்கு உரிமையாளர்களும் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகள் வருவதற்கு முன்பு கழகஅரசு கலைக்கப்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது.

வெளிப்புறக்காட்சிகட்குஅரசுக்குத் தொடர்புடையஇடங்களில் ஏற்கனவே வசூலிக்கப்பட்ட வாடகைத் தொகையை விடக் கழக அரசு காலத்தில் பெரும்பகுதி குறைக்கப்பட்டதையும் திரைப்படத் தொழிலில் உள்ளோர் மறந்திட மாட்டார்கள்.

டூரிங் சினிமாக்களுக்கு ஒன்றரை ஆண்டுக் காலம் என்று இருந்த காலவரம்பை கழக அரசு இரண்டு ஆண்டு காலமாகவும், அதற்குப்பிறகு இரண்டேகால் ஆண்டு காலமாகவும் ஆக்கியது. அதைத்தான் இப்போது மூன்று ஆண்டுக் காலமாக ஆக்கியிருக்கிருர்கள்.

கழக அரசு காலத்தில் டூரிங்சினிமாக்களுக்குக் கம்பவுண்டிங்வரி விதிப்பு முறை அமுல்படுத்தப்பட்டது. ஆனல் டூரிங்சினிமாக்காரர்களில் மூன்றில் இரண்டுபகுதியினர் அந்த வரி கட்ட மறுத்தார்கள், அதனல் ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல்களின் காரணமாக காம்பவுண்டிங் முறை அப்போது ரத்து செய்யப்பட்டது. எல்லாவற்றையும் ஆராய்ந்து பரிந்துரை செய்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கத்தான் கழக அரசு ஒரு குழுவை நியமித்தது என்பதை மீண்டும் நினைவுபடுத்துகின்றேன்.

— நடிகர்களுடைய சம்பளம் அளவிற்கு மீறி அதிகமானதும், தமிழக ஸ்டுடியோக்களில் உள்ள அரங்குகளுடைய வாடகை மிகவும் அதிகப்படுத்தப்பட்டதும், திரைப்படத் தயாரிப்பாளர் களிடையே தேவையில்லாத போட்டிகள் எழுந்ததும் நகர்ப்புறங்களில் உள்ள தியேட்டர்காரர்கள் சிறிய படங்களுக்குக்கூட வாராந்திர வாடகை என்று பெருந்தொகை நிர்ணயித்து அதைத்தரமுடியாத படங்களை வெளியிட மறுத்தும் தமிழ்



திரைப்பட உலகின் இன்னல்களுக்குக் காரணம் என்று சொன்னல் அதுமிகையாகாது.

சிறந்த தமிழ்ப்படங்களுக்கும், நடிகர்கள், இயக்குநர்கள், எழுத்தாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் ஆண்டுதோறும் பரிசுகளும், பாராட்டுகளும், பண முடிப்பும் தருகிற திட்டமும் வகுக்கப்பெற்று இரண்டு மூன்று ஆண்டுகள் நடைபெற்றது. பரிசு பெற்ற நடிகர்கள் இயக்குநர்கள், அந்த விழாக்களுக்குத் தாங்களே நேரில் வராமல், தங்களுக்குப் பதிலாக வேறு யாரையேனும் அனுப்பி, அவற்றைப்பெற்றுக் கொள்கிற நிலையை ஏற்படுத்தினர். அதனையொட்டியும் வேறு சில காரணங்களாலும் அந்தத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.

மூன்ருவதாக எழுப்பப்பட்டுள்ள கேள்வி, ''நட்சத்திர ஆதிக்கத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?' படத்தயாரிப்பில் முக்கியமானவர் கதாசிரியரா? அல்லது டைரக்டரா?

## கலைஞர்

யாருக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும்?' என்பதாகும்.

வெற்றிகரமாகவும், சிக்கனமாகவும், இழப்பு இன்றியும் ஒரு படத்தைத் தயாரிக்க வேண்டுமானல் நடிகர்கள் ஆதிக்கமோ, எழுத்தாளர், இயக்குநர்—யாருடைய ஆதிக்கமோ இல்லாமல் இருந்தால் தான் முடியும் என்பது என் கருத்து, இந்தத் துறையில் எல்லோருடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் படம், பெரிய வெற்றியைப் பெறுகிறதோ இல்லையோ; இழப்புக்கு ஆளாகாமலாவது தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், தப்பிட இயலும்! மிகச் சிறிய காரணங்களுக்காகவெல்லாம், படப்பிடிப்புகள் (ஷூட்டிங்) ஒத்திவைக்கப்படுவதால்ஏபடுகிறஇழப்பு இந்தத் துறையில் அளவிட முடியாததாகும். இந்த நிலைக்குக் காரணமாக இருப்பவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும்.

"தமிழ்ப் படங்கள் கலைப் படைப்புக்களாகவே விளங்க வேண்டும் என்று விரும்புகிற வர்களைப்பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?'' என்பது மற்றொரு கேள்வியாகும். தமிழ்ப் படங்கள் 'கலைப் படைப்புக்களாவும் இருக்க வேண்டும், அதேசமயம் கருத்துப் புதையல்களாகவும் விளங்க வேண்டும் என்ற கருத்துடையவன் நான்.

'வேலைக்காரி', 'பராசக்தி'' 'சொர்க்கவாசல்', 'மனோகரா', 'நாடோடிமன்னன்', நெஞ்சில் ஓர் ஆலயம்', 'அவள் ஒரு தொடர்கதை', 'சாரதா', 'குலதெய்வம்' இந்த வரிசையில் எத்தனையோ கலை ஒளியும் கருத்தொளியும் கொண்ட படங்கள் வரவில்லையா? அவற்றை மக்கள் வரவேற்கவில்லையா? நான் சில படங்களை மட்டுமே நினைவு படுத்தினேன். இந்த வரிசையில் புகழ் பரப்பிய திரைக் காவியங்கள் பல உண்டு.

இறுதியாக, "திரைப்பட விழாக்கள்பற்றித் தங்கள் கருத்து என்ன? அவை, தமிழ் சினிமாக் கலைக்கு நன்மை பயக்குமா?'' என்ற கேள்வியாகும்.

பல்வேறு நாடுகளிலிருந்து வருகிற படங்களின் வாயிலாக நமது தொழிற் நுட்பம் வளர வாய்ப்பு உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனல் 'பால் உணர்வு தூண்டுகின்ற படங்களைப் பார்ப்பதற்கு நமது நாட்டு மக்கள் இப்படிப் பறக்கிருர்களே என்ற, இழிமொழிக்கு ஆளாவது நல்லதல்ல; தமிழ்ப்பட உலகம் வெளிநாட்டுப் படங்களில் காணப்படும் கலைத் திறமையைத் தானும் பெற்றிட முயலவேண்டுமே அல்லாமல், அந்தக் கலாச்சாரத்தை அப்படியே தமிழ்க் கலாச்சாரமாக ஆக்கி, தமிழ்நாட்டைப் பாழாக்கிவிடக்கூடாது என்பதே என் தாழ்மையான வேண்டுகோளாகும்.

—நன்றி 'பேசும்படம்'

## இந்தித் திணிப்பு

## 'பூர்ஷ்வாக்களின்' குறிக்கோள்!

இந்திய ஒருமைப்பாட்டிற்கு அதிக அழுத்தம் கொடுக்கும் பெயரால் இந்தி மொழியை ஒரு தேசிய இணைப்பு மொழியாக ஆக்க வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டத்தையும் அமைத்துக் கொண்டனர்.

உலக மொழிகளில் தொன்மையான ஒன்ருகிய தமிழ்மொழி பேசுகின்ற மக்களிடையேயுள்ள உணர்வையும் மதிக்கத் தவறிவிட்டனர் எல்லா மொழிகளுக்கும் சம உரிமை வழங்க வேண்டும் என்கிற கொள்கையும் காற்றில் விடப்பட்டது.

ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தி மட்டும் ஆட்சி மொழியாக வேண்டும் என்கிற குறிக்கோள் இந்திய பூர்ஷ்வா (முதலாளித்துவ) தலைவர்களுக்கு இருந்தது. இன்னும் இருக்கிறது.

பல மொழி பேசுகின்ற இந்திய மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு இந்தி மட்டுமே என்கிற ஒரு மொழிக் கொள்கை ஏற்றதல்ல. சமுதாய உணர்ச்சிகளில் மிகவும் நுட்பமானது மொழியுணர்வு. மொழியுணர்வுகளை மதிக்கத் தவறினல் பிரிவினைக் கருத்துக்கள் வளர்வதற்கு வாய்ப்பளிக்கும்.

—[கோவையில் நடைபெற்ற வலது கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டுக் கருத்து.]

## கேரளத்துப் புரட்சிக் கவிஞர் !

'யாதும் ஊரே யாவரும் கேளிர்...' என்று அன்றே ஒரு தமிழ்க் கவிஞன் பாடி அகில உலகத்தையும் தன் அன்புக் கரத்தால் அணைத்தான். அரசியல் மேதையான தாமஸ் பெயின் அத்தமிழ்க் கவிஞனின் கருத்துக்கிணங்க, "இவ்வுலகமனைத்தும் என் நாடே; மக்களனைவரும் என் உடன்பிறப்புக்களே; நல்லது செய்தலே என் சமயக் கோட்பாடு" என உலகிலிருக்கும் எல்லா மக்களின் பிரதிநிதியாக நின்று முழங்கினன் !

ஜாரின் கொடுங்கோன்மை ஆட்சி வீழ்ச்சியடைந்து, லெனின் தலைமையில் சமதர்மச் சமுதாயமாகச் சோவியத் மலர்ந்தபோது—தமிழ் மண்ணில் பிறந்து இந்தியாவின் மகோன்னதமான கவிஞர்களில் ஒருவராக இறவாப் புகழ்பெற்ற பாரதியார், "ஆகா, எழுந்தது பார் யுகப் புரட்சி...!" எனப் பாட்டிசைத்து ஆனந்தக் கூத்தாடினன்.

அப்பேர்ப்பட்ட யுகப் புரட்சியைக் கண்டு சோவியத்பால் ஈடுபாடு கொண்ட கவிஞர், சங்கர குருப். கேரளத்து மண்ணில் பிறந்தபோதும் உலகிலுள்ள எல்லா மனிதர்களுக்காகவும் அவர் பாடினர்.

இந்தியாவை முன்னேறவிடாமல் தடுக்கும் மடமை, மதங்கள், மூடநம்பிக்கைகள், பிற்போக்குத்தனம், பெண்ணடிமைத்தனம், முதலாளித்துவக் கொடுமை — அனைத்தையும் எதிர்த்து சங்கநாதம் எழுப்பியவர் சங்கர குருப்.

கேரள மண்ணின் மைந்தனகப் பிறந்தபோதும் அவரது அன்புள்ளம், இந்தியர் அனைவரின் எதிர்காலமும் சிறப்படைய வேண்டுமெனக் கனவு கண்டு, கவிதைகள் படைக்கத் தூண்டுகோலாக இருந்தது; உலகில் எந்த ஒரு பகுதியில் அநீதி நடந்தாலும் அதை எதிர்த்துக் கவிதைக் கணைகள் தொடுத்தவர் அவர் !

நிலவு, மலர், காதல் — போன்றவற்றை வர்ணிப்பதோடு ஒரு கவிஞனின் பணி முடிந்ததாகாது; அவன் ஆற்றவேண்டிய சமுதாயக் கடமையுமுண்டு; அதை முற்றிலும் உணர்ந்தவர் சங்கர குருப். மனித வாழ்வை நசுக்கப் பார்க்கும் வன்முறைகள் — பொருளாதாரச் சுரண்டல்கள் — இன ஒதுக்கல்கள் — ஆக்கிரமிப்புகள் — படை குவிப்புகள்—போர் மிரட்டல்கள் ஆகியவைகளுக்கு எதிராக உலகில் எங்கு போராட்டங்கள் நடந்தாலும் அதை வரவேற்று, அதன் வெற்றிக்கு வாழ்த்துப்பாக்கள் தீட்டியவர் சங்கர குருப்.

பிறந்த பொன்னுடான இந்தியாவைப் போற்றிப் புகழ்ந்த அவர், அகில உலகையும் தன் நாடாகவும், மக்கள் அனைவரையுமே தன் உடன்பிறப்புக்களாகவும் எண்ணி வாழ்ந்தார்.

வியட்நாமை ஆக்கிரமித்து அங்கு அணுகுண்டுகளையும், துப்பாக்கி ரவைகளையும் அமெரிக்கா இடைவிடாது பொழிந்தபோதும், 'மாற்ருனுக்கு மண்டியிடாமல் இறுதி மூச்சுள்ளவரை போராடுவோம்' என முழங்கிய வீர வியட்நாம் மக்களைப் புகழ்ந்துரைத்து சங்கர குருப் எழுதிய கவிதைகள்—உலகில் ஆக்கிரமிப்பும், அடிமைத்தனமும் எங்கு கோலேச்சினலும் அவைகளை எதிர்த்துப் போரிடுபவர்களுக்கு அஞ்சாமையையும், நம்பிக்கையையும் ஊட்டும் வீர காவியங்களாகும்.

தனக்குள்ள சமுதாயப் பொறுப்புக்களைப் புறக்கணித்தும், உலகத்திற்கு ஆற்றவேண்டிய தன்னுலியன்ற கடமையை ஒதுக்கியும், வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்நோக்க அஞ்சியும் கற்பனை உலகில் சஞ்சாரம் செய்யும் கவிஞராக இல்லாமல் — தமக்கிருந்த கவிதைத்திறனை உலக ஒற்றுமை, உலக மாந்தர் அனைவரின் எதிர்கால முன்னேற்றம், அநீதிக்கெதிரான போர்ப்பரணி — போன்ற சிறந்த கடமைகளுக்காகப் பயன்படுத்திய அந்த மாபெரும் கவிஞர்—அந்தோ, நம்மைவிட்டு மறைந்துவிட்டார் !

'வாழ்வே மாயம்...காயமே, இது பொய்யடா...' போன்ற அவநம்பிக்கைக் குரலுக்கு எதிராக — 'வாழ்க்கை, வாழ்வதற்கே' என நம்பிக்கையோடு முழங்கி, தனக்குக்கிட்டிய வாழ்வைப் பெரிதும், முழுமனதோடும் நேசித்த அவர் இறந்துவிட்டார் என்பதை நம்புவதற்குஇதயம்தயங்கினலும், உண்மைஅதுதானே!

"ஆதவனும் என்றேனும் ஒருநாள் அணைந்துவிடக் கூடும்...ஆனல், இந்த உலகம் எல்லையற்றது...நிலைபேறுடையது..." என்று பாடிய அந்தக் கவிஞரின் உயிர் விளக்கு அணைந்துதான் விட்டது.

சங்கர குருப் மறைவைக் கேட்டு 'பாதியில் நின்ற பாடலைப்போல பதறி ஏங்கி அழுதிட வேண்டாம்'. ஏனென்ருல், மக்களிடையே — மக்களுக்காக வாழ்ந்த மனிதர் அவர், பிறப்பு, இறப்பு என்ற இயற்கை நியதியை ஒப்புக்கொண்ட பகுத்தறிவுவாதி. எனவே

*'வானத்து அமரன் வந்தான் காண்
வந்ததுபோல் போனன் காண்......'

என்று நாம் புலம்பவும் வேண்டாம்.

—ஜாகீர்

* புதுமைப்பித்தனின் கவிதையிலிருந்து......

# ஊருக்குத்தானே சொன்னேன் !

ஜனதா கட்சி மத்திய ஆட்சியில் பொறுப்பேற்று ஓராண்டு போய்விட்டதாம். தலையங்கப் புலிகள் தத்தம் தரத்திற்கு ஏற்ருற்போல் தலையங்கங்கள் தீட்டிவிட்டனர்.

தமிழகத்தில் ஏடு நடத்திடவே பிறந்தவர்கள், எழுதுவதற்கென்றே வாழ்பவர்கள் என்று இன்னமும் தங்களை மட்டுமே நம்பிக் கொண்டிருப்பவர்கள், இதயத்தை மட்டும் வேளைக்கு ஒரு வீடாக, நாளுக்கொரு மாளிகையாகக் கொஞ்ச விட்டுக்கொண்டுவருவதைமட்டும் விட்டபாடில்லை-

'பொது நலம் நாடும் நடுநிலை ஏடுகள் என்பது தமிழகத்தில் ஒன்றேனும் உண்டா ?' என்று கேட்போர் தம் கைகளில் 'இதோ பாருங்கள், இதை !' என்று எதையும் காட்டக்கூடிய நிலையில் நாடு இல்லை என்பதை நாணத்தோடாவது நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்

'துடைப்பக்குச்சியை ஐந்தாறு ஆட்களோடு தூக்கிக்கொண்டு ஓடிவிட்டரன்' என்று ஆகாதவனுக்குத் திருட்டுப் பட்டம் சூட்டிடும் 'தேவர்கள்' தூண்களையே ஏப்பம்விட்ட 'அனுமார்களை' ஆழ்வார்களாக ஆக்கி மகிழ்வதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்

இராவணனைக் காட்டிக் கொடுத்தான் என்பதற்காகவே, வீடணனை ஆழ்வாராக்கிய இராமனுகத்தான் இன்றைய ஏடுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்ப்போரால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும்.

எதிரியிடமிருந்து வருபவன், தன் இன நலம் காப்பான் என்று அறிந்து கொள்ளும்போது, அவன்மட்டும் அற்பர்கள் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டுவிடுவான்.

அவ்வளவுதான்! ஏசு உயிர்த்தெழுவார்; புத்தர் புதுப் பிறவி எடுப்பார்; நபி அவதாரம் எடுப்பார்; காந்தி மறுபிறப்பெடுப்பார்! இல்லாவிட்டால், 'ஆட்சி செய்' என்று மக்களால் அனுப்பப் பட்டவர் ஆட்டங்கண்டு மகிழ்ந்தபோதும், படப்பிடிப்பு நிலையப் பாதுஷாவாகப் பட்டங் கட்டிக்கொள்ளத் துடித்தபோதும் 'அடாத செயலிது' என்று அறிவுரை கூருமல் இருப்பார்களா ?

'ஏதாவது செய்துவிட்டுப் போ; எப்படியாவது வாழ்ந்து விட்டுப் போ; எங்கள் இன நலம் காத்தால் போதும்; எங்களவர் பேச்சைக் கேட்டால் போதும்' என்று காலம் வரும்போது கண்களை மூடிக் கொண்டிருப்பார்களா ?

எல்லாவற்றிற்கும்பொறுப்பேற்க வேண்டிய முதலமைச்சர், எடுத்ததற்கெல்லாம் அதிகாரிகள்...அதிகாரிகள் என்று அப்பாவிகள்மேல் பழிபோட்டுத் தப்பித்து ஓடும்போது, 'தவருன செயலிது' என்று தட்டிக் கேட்காமலியிருப்பார்களா ?

காவல் நிலையங்கள், கன்னியர்தம் கற்புப் 'போவல்' நிலையங்களாக மாறிக் கொண்டுவரும்போது, கற்புபறி போகும்போது காக்கும் கதைத் தலைவனக நடித்தவரே! நடக்கலாமா இக் கொடுமை' என்று நாலுவரிகளாவது எழுதாமலிருப்பார்களா ?

கால் பட்டால் குற்றம், கை பட்டால் குற்றமென்று கலைஞர் அரசை ஆகாத பெண்டாட்டியாக அறிவித்து மகிழ்ந்தவர்கள் இப்போதும்ட்டும் 'காதல் டூயட்' பாடிக்கொண்டே களிப்பில் மிதப்பார்களா ?

கட்சி ஏடுகள் என்று கட்டியங் கூறிக் கொண்டிருக்கும் ஏடுகள் குற்றங்களை மட்டுமே சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பதைப் பாராட்ட முடியாவிட்டாலும் பழிப்பதற்கு வாய்ப்பில்லை.

ஆட்சிக் கட்டிலிலிருக்கும் கட்சியின் ஆளுங் கட்சி ஏடுகள் என்று அறிவித்தவிட்ட ஏடுகள், குற்றங்களை மறைப்பதும் குப்புற விழ்ந்தும் மண் ஒட்டவில்லை என்பதும், அதுதான் அவர்கள் வேலை என்பதால் அதைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை.

### தென்னகன்

ஆனல், பொது நன்மை என்னும் பூச்சோடு, நடுநிலைமையென்னும் வேடமிட்டுக் கொண்டு நாடகமாடும் ஏடுகள் கட்சி ஏடுகளாகிக் காலந்தள்ளுவதைத்தான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

காயகல்ப சிட்டுக்குருவி லேகிய மன்மதபாண ஏடு ஒன்று 'ஜனதாவின் முதல் ஆண்டு' என்று தலையங்கம் தீட்டியுள்ளது.

ஏர் உழவன் சின்னத்தின் சொந்தக்காரர்கள் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று குத்திக் காட்டியுள்ளது அந்த ஏடு.

கிளர்ச்சி யூட்டும் அந்தக் 'கிண்டி' ஏடு இரட்டை இலைக்காரர்கள் தங்கள் தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றுகிருர்களா? நிறைவேற்ற முயற்சி செய்கிருர்களா? என்று 'மணி'யான தன் கருத்துக்களை மக்கள் மத்தியில் வைத்தபின் தன் வழக்கைத் தொடர்ந்திருக்க வேண்டும்.

சென்னையில் வண்டியேருமல் தில்லிக்குச் செல்வது 'கிலுகிலுப்'பூட்டும் அந்த ஏட்டுக்குச் சுலபமாக இருக்கிறதுபோலும்.

ஆட்சிக்கு வந்தால் அஞ்சலட்டை விலையைக் குறைப்பேன்; அஞ்சலகங்களை அடுக்குக் கடையாக ஆக்குவேன்' என்ற அறிவைப் பாராட்டிப் பாராட்டி ஓய்ந்து போனவர்கள் அடுத்தவரைப் பார்த்து ஆள்காட்டி விரலை நீட்டுவதற்கு என்ன தகுதியிருக்கிறது ?

'மந்திரிகளை மக்களே தேர்ந்தெடுப்பார்கள்; தாய்க் குலத்திற்குச் சரிபாதி இடம் கொடுக்கப்படும்' என்றெல்லாம் தரமான கருத்துக்களைத் தவழவிட்டவரைப் புரட்சித் தலைவர் என்று போற்றிப் புகழ்பவர்களுக்கு ஜனதாவின் தேர்தல் அறிக்கை பற்றிக் கேள்வி கேட்பதற்கு என்ன தகுதியிருக்கிறது ?

பக்கத்தில் பற்றி எரியும் நெருப்பை அணைக்க ஒரு குவளை நீரையாவது ஊற்றுவோம் என்று எண்ணுத உத்தமர்கள், தில்லியிலே ஏன் புகைகிறது என்று கேட்கலாமா ?

முதல்வர் அவைக்கு வருவதில்லை; தான் சொல்ல வேண்டிய விடைகளை அடுத்தவரை விட்டுச் சொல்லச் சொல்கிருர்; இது பற்றியெல்லாம் தன் எண்ணங்களை எடுத்துச் கூறும் துணிவுஇல்லாத ஏடு, அடுத்தவரைப் பார்த்துக் கேள்விகள் கேட்கலாமா ?

விலைவாசியைக் குறைக்கவில்லையே ஏன் ?

வேலை வாய்ப்புகள் பெருகவில்லையே எதனுல் ?

புதிய சீர்திருத்தங்கள் 'பளிச்' சென்று தெரியவில்லையே ஏன் ?

வேலை நிறுத்தங்கள் மிகுந்துவிட்டன; மறியல்கள் தொடர்கதைகளாகிவிட்டனவே எதனுல்?' என்று தில்லியைப் பார்த்துப் பரவச ஏடு கேட்கிறது.

பெற்ற பிள்ளையின் தலையைப் பேன்கள் தின்னுகின்றன; எதிர் வீட்டுப் பிள்ளையைத் தேடிக் கொண்டு ஈர்க்கொல்லி எடுத்துச் சென்ருளாம் ஒருத்தி.

ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து இன்றுவரை இரட்டை இலையின் ஆட்சியில் விலைவாசிகள் குறைந்துவிட்டனவா — சினிமா டிக்கட்டைத் தவிர ? வேலை வாய்ப்புகள் பெருகிவிட்டனவா ?

'போகிறேன் நடிக்கப் புத்தாண்டு முதல்' என்னும் புரட்சி அறிவிப்புக்கள் வந்தனவே தவிர, புதிய சீர்திருத்

(5-ம் பக்கம் பார்க்க)

# எதற்கு இந்த வேலே?

“திராவிடர்கள் என்பது தாழ்த்தப்பட்டவர்கள் என்று தொடங்கி, ஆதி திராவிடர்கள் என்ருகி, இப்போது தமிழர், இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கிற பூர்வக்குடிகள் என்ருகி விட்டிருக்கிறது”.

இது சட்டமன்றத்தில் முதல்வர் எம். ஜி. ஆர். முழங்கிய முழக்கம் மட்டுமல்ல, சரித்திர முத்திரையும்கூட !

சரித்திரத்தில் ஓர் இனம் இப்படிப்பட்ட பரிணும வளர்ச்சி பெற்றது இதுதான் முதல் தடவை.

வரலாற்றுப் பேராசிரியர் மூலைக்கிறங்கி, கிறு கிறுத்துப் போகும் அளவுக்கு அடித்துப் பேசிய ஆதாரம், முதல்வருடைய அஜீரண மாகாத சரித்திர அறிவைப் பறைசாற்றுகிறது.

“திராவிடர் என்பவர்” என்று சொல்வதற்குப் பதில் “திராவிடர் என்பது” என்று அஃறிணையில் வாக்கியத்தை முதல்வர் அமைத்ததிலிருந்தே, அவருடைய மொழி இலக்கணம் மின்னி ஒளி உமிழ்வதைச் சிந்தாமணிப் புலவர் மே. வீ. வேணுகோபாலர் பாராட்டி, படுத்த படுக்கையாகி விட்டிருப்பார்.

எச் ஜி. வெல்ஸின் உலகச் சரித்திரத்திலிருந்து, சீனிவாச சாஸ்திரியின் இந்து தேசச் சரித்திரம் வரை திராவிடன், தாழ்த்தப்பட்டவனுகவே தொடங்குவதாய்க் குறிப்பு இல்லை.

அப்படித் தொடங்கிய ‘திராவிடன்’ திடீரென்று ஆதி - திராவிடன் என்ற பரிணும வளர்ச்சியை எந்த நூற்ருண்டில் இருந்து பெறுகிருன் ?

அதற்கான ஆதாரம் வேதத்தில் உண்டா ? இலக்கியத்தில் உண்டா ?

திராவிடன் என்ற சொல், தமிழன் என்ற சொல்லாக மருவ. Phonetic System of Language-ல் தர்கரீதியாக விளக்கமுண்டா ?

தமிழ். தமிழம், தாமிழம், திரமிளம்; திராவிடம் என்றுதான் மருவி இருக்கவேண்டும் என்று பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அறைகிருர்.

ஒரு மொழியும் ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாத முதல்வர் திராவிடன்—தாழ்த்தப்பட்டவன்—ஆதி திராவிடன் தமிழன் என்று உளறுவானேன் ?

ஆரியர்கள் இந்தியாவில் அடியெடுத்து வைப்பதற்கு முன் சிந்துச் சமவெளியில் வாழ்ந்து வந்த திராவிட இனத்தில் தாழ்த்தப்பட்டவன் — உயர்த்தப்பட்டவன் என்ற பிரிவுகள் உண்டா ?

## -:கவிஞர் குடியரசு:-

ஆசிரியர்களோடு கருத்து மோதல் செய்த சாதவாகனர் அவர்களின் தத்துவம சாங்கியம்.

சாங்கியத்தோடு ஆரியம் மோதியபோது எழுந்த வேதந்நான் ரிக்வேதம்.

அந்தரிக் வேதத்தில் முதல்வர் குறிப்பிடுகிற “தாழ்த்தப்பட்டவன்” வருகிருனு ?

மனு ஸ்மிர்தி (மனுதர்மம்)க்கு முன்னுல் தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்ற பாகுபாடு உண்டா ?

ஆகம காலத்துக்கு முன்னுல் ஆதி திராவிடர்கள் என்ற இனமுண்டா ?

“ஆதி” என்ற அடைமொழி 19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் ‘திராவிடன்” என்ற சொல்லுக்கு முன்னுல் விழுந்த அரசியல் நெருக்கடியைப் பற்றி முதல்வருக்கு ஏதாவது தெரியுமா ?

தாழ்த்தப்பட்டவன் என்ற சொல் சரித்திரச் சொல்லா (Historical Term) அரசியல் முழக்கமா ?

டாக்டர் அம்பேத்காரும்—சர். பிடி. தியாகராசரும்—டாக்டர் நாயரும் ‘டவுன் டிராடன்ஸ்’ என்று அழைப்பதற்கு முன்னுல் அந்தச் சொல் வழக்கிலுண்டா ?

தாழ்த்தப்பட்டவன் தமிழன் ஆகியிருந்தால் எதற்காகப் பெரியார் அறிவியக்கம் காண வேண்டும் ?

தமிழன் தாழ்த்தப்பட்டவனுக மனுதர்மத்தால் ஆனதால்தான் அய்யா அறிவியக்கம் தொடங்கினுர் என்பதாவது தெரியுமா

கழக வரலாறும் தெரியவில்லை—உலக வரலாறும் தெரியவில்லை. இவர் சரித்திரத்தில் பள்ளியில் எத்தனை மார்க் வாங்கினுர் ?

இவருக்கு எதற்கு இந்த வேண்டாத வேலை !

இவரைப் போன்றவர்களை எண்ணித்தான் வள்ளுவன்,

“கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்ருற் சான்ருேர்
குழாஅத்துப் பேதை புகல்”

என்ற ?றளை எழுதி இருப்பதாவது தெரியுமா ?

[இதன் பொருள் :—அறிவிற் சிறந்தவர் அவையில் மூடன்புகுதல், அசுத்தத்தை மிதித்துக் கழுவாத காலை சுத்தமான படுக்கையில் வைத்தாற் போலும் ]

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் இங்கே என்னென்ன வந்துவிட்டன ?

வேலை நிறுத்தங்களைத் தவிர தமிழ்நாட்டில் வேறென்ன நடக்கின்றது ?

ஓடாத ஆலைகள் தெரியவில்லையா ?

நடக்காத தொழிற்சாலைகள் கண்ணில் படவில்லையா ? மொட்டையடித்துப் போராட்டம் செய்த முழுப் புரட்சி ஆட்சி எங்கே நடக்கிறது ?

என். ஜி. ஓ. போராட்டம்; பொதுமக்கள் — எம் ஜி. ஆர். பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் எல்லாம் எங்கே நடக்கிறது ?

அரசு ஊழியர்களை அரைடிக்கட இரசிகன் தாக்குவதெல்லாம் எந்த ஆட்சியில் ?

இவற்றையெல்லாம் கண்டித்துத் தலையங்கம் எழுதி விட்ட பிறகுதானே தில்லிக்குச் செல்லவேண்டும் !

தில்லியின் ஆட்சியில் ‘மினி எமர்ஜன்சி’ உள்ளது என்று சுட்டிக் காட்டுகிறது ‘சுகம்’ அளிக்கும் ஏடு.

கவர்ச்சித் தலைவரை ஆதரிக்கும் கவர்ச்சி ஏடு ஒன்றை மட்டும் மறந்துவிட்டது.

‘மினிஎமர்ஜன்சி’ என்னும் சொல்லை நடமாடவிட்டவர் கலைஞர். யாரை நோக்கி இப்படிக் கூறினுர் என்பதைப் பயண எழுத்தாளருக்கு யாரும் நினைவூட்டத் தேவையில்லை.

எடுத்ததற்கெல்லாம் 307 என்னும் எம். ஜி. ஆரை நோக்கித்தான் ‘இந்திராவின் எமர்ஜன்சியே’ இருந்தஇடம் தெரியவில்லையே; நடிக முதல்வரே! உங்கள் மினி எமர்ஜன்சி எத்தனை நாளைக்கு ? என்று கேட்டார் கலைஞர்.

கொலை முயற்சி, கொலை செய்யத் தூண்டல் என்று வலைவீசித் தன் வஞ்சகத்தைத் தீர்த்துக் கொள்ளும் ‘கோபுத் தலைவரைப் பார்த்து ‘இன்னுமா மினி எமர்ஜன்சி’ என்று கேட்கத் துணிவில்லாமல் தில்லிக்குப் புத்தி சொல்லும் ‘திக்குவிஜயப் பத்திரிகை’ இனியாவது தன் பார்வைக்குரிய திசையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

காவல் நிலையத்திற்குச் செல்லும் இரட்டை இலைச் சட்ட மன்ற உறுப்பினர் கைதியை விடுதலை செய்து விட்டுக் ‘காலரை’ நிமிர்த்தி நடக்கிருர்; சாராயக்கடை வீரரின் இரத்தத்தின் இரத்தங்கள் காவலர்களைக் கட்டி வைத்து அடிக்கின்றனர்; இரசிகர் மன்றங்களில் இராஜ்ய பரிபாலனம் நடக்கிறது.

இப்படிப்பட்ட எண்ணற்ற செய்திகள் எங்கும் பிரகாசமாய் நடந்துகொண்டு வருவதைக் கண்டும் நமக்கென்ன என்று இருக்கும் மணியர்கள் ‘செய்தாயா ?’ என்று தில்லிமீது சீறிப் பாய்வது ஏன் ?

ஏர் உழவன் ஆட்சியில் அதுவரும்: இது வரும் என்று எதிர்பார்த்த மக்கள் ஏமாந்துவிட்டார்களாம்; ‘ஏ’ எழுத்தாளர் கூறுகிருர் இப்படி.

இரட்டை இலை ஆட்சி வந்தால் ‘அதுவரும். இது வரும்’ என்று எதிர்பார்த்த மக்கள் ஏமாந்து கிடப்பதை இன்னும் இவர் காணுமல் இருப்பது ஏன் ?

‘தாயைக் காத்த தனயன்’ ஆட்சி வரவேண்டும் என்று தவங்கிடந்ததே தாய்க்குலம். அந்தத் தாய்க்குலம் தன் தவறை நினைத்துத் தலையில் அடித்துக் கொள்ளுகிறது

‘உழைக்கும் கரங்களே’ என்று உரிமையுடன் அழைத்தவரின் ஆட்சி வரவேண்டும் என்று ஆவல் கொண்ட உழைக்கும் வர்க்கம், செய்த பாவத்தைச் சிந்தும் கண்ணீர் கொண்டே கழுவிக்கொண்டு வருகிறது.

‘விவசாயியின் வேதனைக் குரலைப் பின்னிருந்து ஒருவர் பாட முன்னிருந்து வாயசைத்தவரின் ஆட்சி வரவேண்டும் என்று வரவேற்று நின்றவர்கள், வயிற்றில் அடித்துக் கொண்டு தங்கள் வயிற்றெரிச்சலைக் காட்டிக்கொள்ளுகிருர்கள்!

‘மீனவ நண்பா, மேலான பதவிக்கு வா என்று மீனைப் பிடிக்க வலை வீசும்போதெல்லாம் பா[illegible] மீனவர்கள் தம் வா[illegible]டலோரத்தில் ஒதுங்கிய[illegible]மரமாகக் கிடப்பதைக் கண்டு வருந்திக் கன்னத்தில் போட்டுக் கொள்ளுகிருர்கள்!

கம்பெடுத்துச் சுழற்றியவரின் காலாட் படைகளால் காயம்பட்டுக் கிடக்கும் அரசு ஊழியர்கள் தாங்கள் கொண்ட ஆசைக்குக் கிடைத்த அடையாளமாக அன்றோ அதைத் தடவிப்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்!

வருகின்ற தஞ்சைநாடாளுமன்றத தேர்தல், மாறிவிட்ட இச் சூழ்நிலையை மற்றவர்களுக்குக் காட்டத்தான் போகின்றது.

அப்போதாவது,

செப்படிவித்தை எழுத்துக்களாலேயே சித்து விளையாட்டுகள் செய்யும் எத்தர்களின் விழி திறக்காமலா போகும்!

அதுவரை,

ஊருக்குச் சொல்லட்டும் ‘உபதேசம்!’ ★

## ஏன் இந்த அவல நிலை?

நான் தந்தை பெரியார் அவர்களைத் தெய்வம் என்று சொல்லமாட்டேன். காரணம் இன்று அண்ணு சதுக்கத்திலே சூடம், சாம்பிராணி வைத்துக் கொளுத்துவதைப் பார்க்கிருேம். அண்ணுவை 64-வது நாயன்மார் என்று கூட ஆக்கிவிடுவார்கள் போலிருக்கிறது. அண்ணு தனது எழுத்தாற்றல், பேச்சாற்றலால், ஆட்சியை சாமான்ய மக்களின் கையிலே கொண்டுவந்தார். அகற்றமுடியாது என்று கருதப்பட்ட ஆட்சியை அகற்றிக் காட்டினுர்.

நாம் எவ்வளவோ உலக விஷயங்களைப் பேசுகிருேம். விஞ்ஞானங்களைப் படிக்கிருேம். ஆனுலும் ‘ஸ்ரீ ராமஜெயம்’ எழுதிக்கொண்டிருக்கிருேம். பிள்ளையார் சுழியைப் போடாமல் ஆரம்பிப்பதில்லை. இந்த அவல நிலை ஏன்?

தன்னம்பிக்கைஇல்லாததுதான் இதற்குக் காரணம்.

—உயர் நீதி மன்ற நீதிபதி மோகன்

# சுகம் எங்கே?

## கருணாநிதி



"ஏரிமலை ஆகிவிட்டதப்பா என் நெஞ்சம்; தாங்க முடியவில்லை இந்த வேதனையை என்னால்! தாய்க்குப் பிள்ளையில்லை யென்கிறார்கள். எதையாவது சொல்லிவிட்டுப் போகட்டும்; அந்தப் பிள்ளையையாவது ஒழுங்காக வளர்க்கிறார்களா என்றால், அதுவுமில்லை; அதைச் சித்திரவதை செய்து சீரழிக்கிறார்கள்! எப்படியப்பா சுமக்க முடியும் இந்தச் சோகச் சுமையை? சொல் சுந்தர்: நீயே சொல்!

சுவையான செய்திகளையே உன்னோடு தினம் தினம் பேசியிருக்கிறேன்; இன்று உன்னையும் அழ வைக்கும் செய்தியைப் பேசுகிறேனே யென்று என்மீது வருத்தப்படாதே. சகோதரா! சகிக்க முடியவில்லையடா இந்தக் கொடுமையை! என் இருதயச் சுமையை உன் கனிவான மொழி யொன்றினால் மட்டுமே குறைக்க முடியும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை நீயும் தோற்று விடுவாய்! அப்படி நொந்துபோயிருக்கிறேன் நான்.

"அன்பா! அழாமல் பேசு-முதலில் விஷயத்தைச்சொல்! அப்படி யென்ன வராதது வந்துவிட்டது?"

'வராதது வந்துவிடவில்லை—வழக்கமாக வஞ்சகர்கள் செய்யும் வேலைதான் இது! ஆனால் இது, இதுவரை நடக்காத இடத்திலே நடந்து விட்டது

"மாமனார் வீட்டிலா?"

"குடும்ப விஷயமில்லை சுந்தர் நான் பேசுவது! கொந்தளித்துக் குமுறிவிட்ட கோர நிகழ்ச்சியடா இது!"

"பிறகு யாராவது நண்பர்களிடம்?"

'நண்பர்களா? சகோதரா! நண்பர்களைப் பற்றித்தான் நாமிருவரும் ஒரு நல்ல முடிவுக்கு வந்து பல நாளாகிறதே! நாசம் நடந்துவிட்டது-நடக்காத இடத்திலே நடந்து விட்டது!"

"புரியும்படிச் சொல்-என்னையும் குழப்பாதே!"

"திருடி விட்டார்கள்!"

"எதை? பணத்தையா?"

"பணம் போனால் என்ன-அதைப்பற்றி நான் என்றைக்கடா இப்படிக் கவலைப்பட்டிருக்கிறேன்?"

"பிறகென்ன: குழந்தையின் முத்தாரமா?"

"அது அந்தத் திருடனுக்குத் தேவையில்லைபோலும்?"

"பிறகு எதைத்தான் திருடினான்? யார் அந்தத் திருடன்? அதைச் சொல்!'

"திருடன் பெயரைச் சொன்னால் நீ நம்பமாட்டாய்-நானும் நம்பவில்லை முதலில்! இப்போதுதானப்பா உள்ளம் கொதிக்கிறது! மகனைப் பறிகொடுத்த தாயின் வயிறுகூட இப்படி எரியாதப்பா!"

"சரிதான்-ரத்தக் கண்ணீரே விட ஆரம்பித்து விட்டாய்!"

"அதுதானப்பா என் கதை! கண்ணீர்க் குளமாகத்தான் மாறிவிட்டது என் வாழ்க்கை"

"நீ இப்போது சொல்லப் போகிறாயா இல்லையா? கடைசியாகக் கேட்கிறேன், விவரத்தைச் சொல்'

'என் எழுத்தைத் திருடி விட்டார்கள்?"

'என்ன?'

"யசோதர காவியத்தைத் தழுவி ஒருகற்பனைச் சித்திரம் வரைந்தேனே தெரியுமா உனக்கு?"

'ஆமாம், சொன்னாய்! நான் படித்துப் பார்க்கவில்லை-அந்தக் கற்பனைக்குத் தலைப்புக்கூட 'சுகம் எங்கே?' என்று அமைத்திருந்தாய் அல்லவா!'

'அதுதான் சகோதரா! சூதர்களால் களவாடப்பட்டு விட்டது!"

"தலைப்புதானே!"

'அல்ல! அல்ல! தலைப்பைப் பற்றியல்ல நான் பேசுவது! கருத்துக்களும் உரையாடல்களும் களவாடபட்டு விட்டன பாவிகளால்!'

"பதறாதே!"

"நான் என்றைக்காவது இப்படிப் பதறிப் பார்த்திருக்கிறாயா? என் அன்பு உருவான தந்தையின் பிணத்தைப் பார்த்தபோதுகூட மரம் போலத்தானே நின்றேன்- அழுதேனா? பதறினேனா? சுந்தர், உனக்குத்தான் தெரியுமே; என் இதயராணி, இல்லறத்தின் விளக்கு, இமைகளைத் திறக்காமல் மூடி இறப்புலகம் ஏகிவிட்ட நேரத்தில் கூட வாய் விட்டுக் கதறவில்லை.

நான் அமைதியாகததான் நின்றேன்— பட்ட மரம்போல் ஆனேனே தவிரப் பதறவில்லையே சகோதரா!

அப்பா! அப்பா! என அழைத்துத் தாவிய என் செல்வன் செத்துவிட்டபோதும் கண்ணீர் உகுத்துவிடவில்லை... கலங்கினேன் — கதறிடவில்லை! அதுவும் தெரியும் உனக்கு! அருமைச் சகோதரனே! இப்போது நான் பதறுகிறேன் — துடிக்கிறேன்!

இதை நான் மறைத்திடவிரும்பவில்லை. கழுத்திலே அரிவாள் பாய்ந்திருந்தால் தலைவேறு முண்டம் வேறாகப் போயிருக்கும்! இந்த அரிவாள் இருதயத்தைக் கொத்திவிட்டதடா, என் சுந்தர்!

அலறுகிறேன் — இந்த உலகத்தின் காதிலே விழட்டும் என்ற நினைப்பிலே; கூவுகின்றேன்; கூச்சலிடுகிறேன் —கூடாது! கோழைபோல் அழக்கூடாது என்று நீ கூறுகிறாயா' — என் ஒருவனின் கண்ணீர் அந்த" பாதகர்களின் பாறுங்கல் மனத்தைக் கரைத்துப்பண்படுத்தி விடும் என்பதால் அல்ல நான் அழுவது! பழம் கிடைக்கும் அழுதால் என்று குழந்தை நினைக்கிறதே அதுபோலவோ, பலன் கிடைக்கும் அழுதால் என்று பாசாங்குக்காரி நினைப்பாளே அதுபோலவோ அல்ல நான் அழுவது! மண்டையைப் பிளந்தால் ரத்தம் தானே கொட்டுகிறது அதுபோலத்தான் கண்ணீரும் கொட்டுகிறது. என் கண்ணீருக்குச் சக்தியிருக்கிறதோ இல்லையோ — அதைப்பற்றி ஆராய்ச்சி எனக்குத் தேவையில்லை — நான் அழுகிறேன், இல்லை—அழும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு விட்டேன்?"

"மிகவும் புண்பட்டிருக்கிறாய்—கொஞ்சம் நிம்மதியாக மௌனமாக இரு!"

"முடியாது சுந்தர்! என் இருதய பாரம் குறைய வேண்டும் — ஏதாவது பேசிக் கொண்டேயிருக்கிறேன் — பித்தன் என்று கூறுவாய்! கூறிக்கொள், கவலையில்லை!"

"நானும் சேர்ந்து உன்னோடு அழுகிறேன் — விஷயத்தையாவது புரியும்படிச் சொல்!

"அதுதான் சொன்னேனே; யாசோதர காவியத்தைத் தழுவி 'சுகம் எங்கே?' என்று ஒருகற்பனைக் காவியம் தீட்டினேன் அதிலே உள்ள என் உரை நடைகளைத் தீவட்டிக் கொள்ளை அடித்துவிட்டார்கள் தீயவர்கள்!"

"அந்தத் தீயவர்கள்தான் யார் என்று கேட்கிறேன்—அதைச் சொல் முதலில்!'

"யசோதரகாவியத்தில் வரும் அமிர்தமதி என்ற அரசியை விடக் கொடியவர்களப்பா அந்தத் திருடர்கள்!'

"அமிர்தமதி! யசோதர காவியம்! நான் எதுவுமே படித்ததில்லை — நீ என்னிடம் வந்து உதாரணம் காட்டுகிறாய்!'

"யசோதர காவியம் – நீ படித்ததில்லை? ஐஞ்சிறு காப்பிய வரிசையிலே உள்ளதல்லவா அந்தக் காவியம்! அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறும் சமண சமய நூல், சுந்தர்! அதிலே வரும் அமிர்தமதி என்ற பாத்திரத்திற்கும் என் எழுத்தைத் திருடிய எத்தர்களுக்கும் கொஞ்சமும் வித்தியாசமில்லை! சுருங்கச் சொல்லப் போனால் இந்தச் சம்பவத்துக்கும் யசோதர காவியத்திற்கும் நிரம்பத் தொடர்பு உண்டு!"

"சரி! அதையாவது புரியும்படிச் சொல்!"

"யசோதரன் அவந்தி நாட்டு மன்னன். அவனது பட்டத்து ராணி அமிர்தமதி. ராணியின் மனமறிந்து மகிழ்ச்சியளிக்கும் மன்னன்தான் யசோதரன். சுந்தரரூபன், சுகுமாரன். நாட்டுக்கு அதிபதி! அத்தகைய செங்கோலேந்தியின் சிற்றின்பக் கூடாரத்தை அலங்கரிக்கக் கூடிய பாக்கியம் அந்தச் சிங்காரி அமிர்தமதிக்குக் கிடைத்திருந்தது. மன்னவனின் மஞ்சத்து மயில் என்றால் சாதாரணமா? தாதிகள் உண்டு; தயவு கேட்டு நிற்கப் பல சேவகருண்டு!

தங்கம் கலந்த உணவை உண்டு —அங்கம்பூரிப்புக் கொண்டு—காதல் மிஞ்சுதே சேடி காவலனைக் கூப்பிட்டு வாடி! என்று அழைத்த குணமே

அவர்கள் ஓடி, ஆடிப்பாடி அரசனை அழைத்து வருவர்.

ஆனைமேல் அம்பாரியா? அணிதேர்ச்சவாரியா? பூனைரோமத்தால் மிதியடியா? புலிப் பாலா? புரவிக் கொம்பா? எது கேட்பினும் தருவர்—அதற்கெனவே எடுபிடிகள் ஏராளமாக உளர். இந்தச் செல்வாக்கின் மத்தியிலே செல்லநடை போடும் சேயிழையாள் அந்த அமிர்தமதி!"

"ஆகா பிரமாத வர்ணனை! சொல்! இன்னும் சொல்!"

தன் தோழன் சொல்ல வந்த சோகச் செய்தியை மறந்து காவியத்தின் சுவையிலே இலயித்துவிட்டதைச் சுந்தர் உணர்ந்தான்—ஆகவே மீண்டும் காவியத்தைத் தொடரத் தூண்டினான்.

"அழகி அமிர்தமதியும் அரசன் யசோதரனும் ஒருநாள் அந்தப் புரத்தில் இன்பக்கேளிக்கையில் ஈடுபட்டனர்."

"ஓகோ! ஒய்யாரமான கட்டமே இப்போதுதான் ஆரம்பம் போலும் — சொல் சோதரா, சொல்!"

"கட்டிற் காவியம் எழுதி முடித்தனர்—கண் அயர்ந்தனர்.'

"சரிதான்; சுருக்கமாக முடித்துவிட்டாய்! பிறகு காலையில் எழுந்தனர்; அவ்வளவுதானே?"

"இல்லை, இல்லை—அரசன் தூங்கும் சமயம் ராணி கண் விழித்தாள். ஆமாம்! மலர் விழித்துக் கொண்டது; வண்டோ தூங்கிக் கொண்டிருந்தது விழித்த சமயம் அந்த இரவில் ஒரு இனிய கானம் அவள் காதில் ஒலித்தது!"

"சரி"

'கானம் வந்த பக்கம் கருத்தைச் செலுத்தினாள் அந்த கானம் எழுப்பியவனைக் கட்டித் தழுவ வேண்டுமென்று துடித்தாள்!"

"அய்யய்யோ—அப்புறம்?"

"மறுநாள் தன் தோழி குணவதியை அனுப்பினாள்; அர்த்த ராத்திரியிலே பாடியவன் யாரென்று அறிந்து வர? தோழியும் போய் அவனைக் கண்டாள் இசை எழுப்பியவன் ஒரு யானைப் பாகன். அவன் எப்படிப்பட்ட அழகுடையவன் தெரியுமா? தோழி வாயிலாகக் கவிஞர் கூறுகிறார் கேள்:—

"நரம்புகள் விசித்த மெய்யன்; நடையின்றி கழுதணிந்தோன். திரங்கிய விரலன். கையன், சிறுமுகன், சினவன், சீறிற் குரங்கினையனையன் கூனன், குழிந்து புக்கழிந்த கண்ணன்!"

"இன்னும் பலவாறுக அவனது விகாரங்களை வர்ணித்து அவன்மீது ஆசை வைப்பது தகாது என்று ராணியிடம் தோழி கூறுகிறாள். அமிர்தமதியோ, 'அவன் எப்படியிருந்தாலும் கவலையில்லை; அவனை அணைத்து மகிழத்தான் வேண்டும்' என்று பறக்கிறாள். கனியிருட்பக் காய் பறிக்கலாமா அம்மா! சகல அழகும் பொருந்திய அரசர் பெருந்தகையின் மனைவியாகிய நீங்கள், கேவலம் குரங்கைப் போன்ற—ஒரு சாக்கடை மனிதனைக் கொஞ்சிக் குலவ விரும்பலாமா தாயே!' என்றெல்லாம் குணவதி தடுக்கிறாள்.

ஆனால், அரசியோ, 'அவன் எப்படியிருந்தால் எனக்கென்ன; அவன் நல்ல இசைவாணன்; அவன் அணைப்பிலேதான் சுகம் இருப்பதாக நான் உணர்கிறேன்' என்று கூறியதோடு, அந்தப் பாடல் கற்ற யானைப் பாகனையும் வலிய இழுத்து, அணைந்து மகிழ்ந்தாள்.

நாளொருமேனியாக அந்த நாய்க் காதல் வளர ஆரம்பித்தது. ஒருநாள் அரசனே அவர்களது காதல் களியாட்டத்தைத் தூர நின்று பார்த்து விட்டான்.

அப்போது என்ன நடந்தது தெரியுமா? அரசன் எந்தக் காட்சியைக் கண்டான் தெரியுமா? வழக்கமாக யானைப் பாகனைச் சந்திக்கும் அமிர்தமதி அன்று சற்றுத் தாமதமாக அவனிடம் வந்துவிட்டாளாம் அதற்காக அந்த யானைப்பாகன் — அட்டபங்கன் என்னும் பெயருடைய அந்த அவலட்சணம்—அமிர்தமதியின் அழகுக் கருங்கூந்தலைக் கையால் இழுத்து எறிந்து அவளைக் கீழே தள்ளி, இரு கைகளாலும் நையப்புடைத்து 'ஏன் காலம் தாழ்த்தி வந்தாய்?' என்று கனல் கிளம்பக் கேட்கிறான்.

"கட்டளையிட்டால், காதம் யோசனை என்ற தூரம் ஓடிக் காரியமாற்றிடும் பணியாளர்களின் தலைவி — மண்டலாதிபதியின் மனைவி—ஒரு அழுகிய உடல் படைத்த யானைப் பாகன், தன்னைத் திட்டி அடிப்பதிலே சுகம் காண்கிறாள்.

"அவள் மலர்ப்பாதங்களை அர்ச்சிக்க ஆயிரம் பேர் காத்திருப்பர் — அவள் அந்தப் பாகனின் கால்களைக் கண்ணில் ஒத்திக்கொண்டு காலந்தாழ்ந்தமைக்கு மன்னிப்புக் கோருகிறாள். இதைக் கண்ட மன்னன் வெகுண்டான். தனக்குத் தடையாக வந்த மன்னனுக்குத் தந்திரமாக நஞ்சு கலந்து அவனையே தீர்த்துக்கட்டிவிட்டாள். அந்தப் பாகனின் பாட்டிலே சுகம் கண்ட பாதகி. அந்தப் பாதகிக்குப் பெயர் அமிர்தமதி! இதுதான் சுந்தர் யசோதர காவியத்தின் சுருக்கம்!"

"நன்றாயிருக்கிறது — சந்தனத்தை மறுத்துச் சாக்கடையிலே சுகம் கண்ட ராணியின் கதை நன்றாயிருக்கிறது! இந்தக் காவியத்திற்கு நீ "சுகம் எங்கே?" என்று பெயர் வைத்தது மிகவும் பொருத்தம்"

"இப்போது புரிகிறதா— என் எழுத்தைத் திருடியவரும் அந்த அமிர்தமதியும் குணத்தால் ஒருவரே என்பது;கேள் சுந்தரம்! பேச்சை மாற்ற வேறுபக்கம் திரும்பாதே. காவியத்தில் வரும் அமிர்தமதி அரசனை விட்டு யானைப் பாகனைத் தேடுகிறாள்; அந்த விகாரியுடன் விபச்சாரமும் நடத்துகிறாள்; நல்லது கசக்கிறது, நாசம் இனிக்கிறது அவளுக்கு! அவளைப் போலத்தான் என் எழுத்தைத் திருடியவருக்கும் தேன் கசக்கிறது! ஆமாம் சகோதரா! திருட்டுத் தனம் இனிக்கிறதாம்."

"யார் என்றுதான் சொல்லேன்"

"சொன்னால் நம்பமாட்டாய்! அவ்வளவு நல்லவராய் இருந்தார்—யாரோ அவரை விஷமாக்கி விட்டார்கள். அய்யோ அவர்கள் வாழ மாட்டார்கள் மூளையை உருக்கிச் செய்த கற்பனைகளை உழைக்காமல் எடுத்து விழுங்கிவிட்ட எத்தர்கள் அதிகநாள் வாழமாட்டார்கள்! வியர்வை சொட்டச் சொட்ட, விலாவிலே வலி கொட்டக் கொட்ட விழி மூடாமல் வேலை செய்து நான் உருவாக்கிய தழுவல் இலக்கியத்தைப் பாடுபடாமல் எடுத்து வாயிலே போட்டுக் கொண்டவர்களுக்கு நல்லதொரு தீர்ப்புக் கிடைக்காமல் போகாது!

"உஸ்! பேசாமலிரு! அலட்டிக் கொள்ளாதே!"

"என் நிலைமையிலே நீ இல்லை—அதனால் அப்படிச் சொல்கிறாயா?"

"நானும் நீயும் ஒன்று தானே-வேறு வேறா?"

"அப்படியானால் இதற்கு என்னதான் வழி? அதையாவது சொல்! இந்த அக்ரமத்திற்கு அழிவே கிடையாதா?'

'ஏன் கிடையாது! நீ சொன்னாயே கதை-அதிலே இருக்கிறதே முடிவு! அமிர்தமதி தன் 'சுகம் எங்கே?' யென்று தேடிக் கொண்டாள் கணவனையும் கொன்றாள் ஆனால் அந்த அற்ப புத்திக்காரி காவியத்திலே களங்கம் நிறை அவமானச் சின்னமாக ஆகிவிட்டாளே அதை அந்தக் கைகாரியால் மாற்ற முடிந்ததா? அதேபோல் உன் எழுத்தைத் திருடியவர்களும் அவமானத் தோட்டத்திலே பூத்துவிட்ட எருக்கம் பூவாகி விடுவார்கள். பயப்படாதே!'

"சுந்தர் நீதான் எனக்கு ஆறுதல்!'

"கவலைப்படாதே! அந்த எழுத்துக் கொள்ளையர் யார்? அதைச் சொல்!"

"பிறகு சொல்கிறேன்-இப்போது என்னால் பேச முடியவில்லை.'



# சிறைச் சாலைகளா? சித்திரவதைக் கூடங்களா?

'யூதர்களையும், கம்யூனிஸ்டுகளையும் பூண்டற்றுப் போகும்படிச் செய்வேன்' என்று சூளுரைத்தவன் இட்லர். அவனுடைய ஏவுதலின்படி யூத-கம்யூனிஸ்டுக் கைதிகளைச் சிறைக் கொட்டடிகளிலும் அடிமை முகாம்களிலும் ஜெர்மானிய அதிகாரிகள் எவ்வாறெல்லாம் துன்புறுத்தினார்கள் என்பதை விவரித்துட பல நாவல்களும், நினைவுக் குறிப்புகளும், கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

மைக்கேல் பார்மோகோவ் எழுதிய 'நான் கல்லறையிலிருந்து பேசுகிறேன்' - கிறிஸ்டோபர் நிக்கோல் எழுதிய 'இடியும் முழக்கமும் (Thunder and the Shouting) -போன்ற நாவல்களும்- ஜூலியஸ் பூசிக் எழுதிய 'தூக்கு மேடைக் குறிப்புகள்' என்ற சுயசரிதையும் அவைகளில் குறிப்பிடத்தக்கவைகள்.

அவைகளைப் படிப்பவர்கள், 'இட்லர் என்னதான் கல்நெஞ்சு கொண்டவனாக இருந்தாலும்-அவன் கீழ் பணியாற்றிய சிறை அதிகாரிகள் இத்துணை கொடுமையாகக் கைதிகளைச் சித்திரவதைகள் செய்திருக்க இயலுமா?' என வியப்படையத்தான் செய்வார்கள்.

தியாகச்செம்மல், நாடாளுமன்ற உறுப்பினர், சிறைக் கொடுமைகளால் உயிரிழந்த சிட்டிபாபு-குடியரசுத் தலைவரின் விருது பெற்ற சிறந்த நடிகையான சிநேகலதா ரெட்டி ஆகியோரின் சிறைக் குறிப்புகளைப் படிப்பவர்கள், இட்லர் காலத்துச் சித்திரவதைகளை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

எத்தனையோ சிட்டிபாபுக்களும், சிநேகலதா ரெட்டிகளும் இருண்ட காலத்தின் போது இந்தியா முழுக்க சிறைக் கொட்டடிகளில் எண்ணற்ற சித்திரவதைகளுக்கு ஆளானார்கள். அவர்களில் பலருடைய கதைகள் சொல்லப்படாமலேயே போய்விட்டன. சொல்லப்பட்டிருந்தால்...

இந்தியா என்ற மிகப் பெரும் ஜனநாயக நாட்டில் (!)-சிறைகள் சீர்திருத்தம் செய்யப்பட்டுவிட்டதாக 'தம்பட்ட'மடித்துக் கொண்ட பின்னும் சிறைகளில் நிகழும் அக்கிரமங்களை நினைத்துப் பார்க்கும்போது-

இட்லர் போன்ற இதயமில்லாதவர்களைச் சரித்திரம் மீண்டும் மீண்டும் படைத்துக் கொண்டுதான் இருக்கிறது என்ற வருத்தம் தோய்ந்த எண்ணம் நெஞ்சத்தில் எழாமல் இராது.

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று பிரிட்டிஷ் ஆட்சியில் சிறையில் அடைக்கப்பட்ட நேருவின் தங்கையான கிருஷ்ணா ஹத்தீசிங் தம்முடைய சிறை அனுபவங்களை "விதி என்ன செய்யும்?" என்ற நூலில் விவரித்துள்ளார். விபச்சாரிகளுக்கிடையே அவர் அடைக்கப்பட்டதைப் படித்தோரின் நெஞ்சமெல்லாம் பதறியது,

விடுதலை பெற்ற, சுதந்திர பூமியான 'புண்ணிய பாரதத்தில் கூட இருண்ட காலத்தின்போது அதே கதை தொடர்ந்தது...

ஒருகாலத்தில் 'மகாராணியாகத் திகழ்ந்த காயத்ரிதேவி அரசியல் கைதியாகச் சிறைபட்டபோது அவரும் விபச்சாரிகளுக்கிடையேதான் அடைக்கப்பட்டார்!

கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத கொடுமைகள் இட்லர் ஆட்சியின் கீழ் சிறைச்சாலைகளில் எப்படியெல்லாம் நடந்தன என்பதை விவரித்துப் பல நாவல்கள் எழுதியவர் லியான் ஊரிஸ். அவர் தம்முடைய நாவல் ஒன்றில், ஜெர்மனிய பாசிஸ்ட் அதிகாரிகள் ஒரு சகோதரியையும் அவளுடைய சகோதரனையும் உடலுறவு கொள்ளும்படி வற்புறுத்தி எப்படியெல்லாம் சித்திரவதைகள் செய்தார்கள் என்பதைச் சித்தரிக்கிறார்.

அதைப் படிக்கும்போது. "இப்படிக்கூட நடக்குமா? அவர்களென்ன மனிதர்களா? அல்லது மிருகங்களா" எனக் கேட்கத் தோன்றும்.

—ஆனால் அம்மாதிரியான படுபாதகமான நிகழ்ச்சி இந்தியாவில், இருண்ட காலத்தின்போது பன்சிலால் இட்லராகக் கோலோச்சிய ஹரியானா சிறை ஒன்றில் நடந்தது.

ஒரு சகோதரனையும், சகோதரியையும் நிர்வாணமாக்கி, சின்னஞ்சிறு அறையில் எதிர் எதிரே நிற்க

**சித்தார்த்தன்**

வைத்து அதிகாரிகள் செய்யத் தூண்டிய நிகழ்ச்சி இருக்கிறதே...

—'கல்கத்தாவில் நடந்த 'இருட்டறை நிகழ்ச்சிகள் கடந்துபோன சரித்திரமல்ல; ஆனால் நிகழ்கால உண்மையே அவை!'

இருண்ட காலத்தின்போது சென்னை மத்திய சிறைச்சாலையில் நடந்த கொடுமைகள் குறித்து விசாரணை செய்த நீதிபதி திரு. எம். எம். இஸ்மாயில் தன்னுடைய அறிக்கையில் இவ்வாறு கூறுகிறார்

இந்தியச் சிறைச்சாலைகள் இன்றளவும் அநாகரிக நிலையில்தான் உள்ளன என்பதையும் கைதிகளும் மனிதர்கள்தான் எனக் கருதும் மனப்போக்கு பெரும்பான்மையான அதிகாரிகளிடமும் காவலர்களிடமும் இல்லை என்பதையும் சென்னை மத்திய சிறைச்சாலையில் நடந்த கொடுமைகள் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன.

இஸ்மாயிலின் அறிக்கை திடுக்கிடும் உண்மைகளை வெளியிட்டு மனவேதனைப் படுத்துவதோடு. உண்மையிலேயே சிறைச்சாலைகளைச் சீர்திருத்த இன்னும் எவ்வளவு காலம் ஆகுமோ என்ற கேள்வியையும் எழுப்புகிறது...

1976-ஆம் ஆண்டு: ஜனவரி திங்கள் முப்பத்தொன்றாம் தேதி; இரவில் வருகிறது, "தி. மு. கழக ஆட்சி நீக்கப்பட்டது" என்ற செய்தி!

அதைத் தொடர்ந்து தமிழகமெங்கிலும் உள்ள தி. மு. கழகத்தவர் மட்டுமல்ல — இ. கம்யூனிஸ்டுகள், திராவிட கழகத்தவர்கள், பழைய காங்கிரஸ்காரர்கள், ஜனசங்கத்தினர்கள் — அக்கட்சிகளின் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்டவர்கள் அனைவரும் வேட்டையாடப்பட்டுச் சிறைக் கொட்டடிகளில் அடைக்கப்படுகிறார்கள்.

அவர்கள் செய்த குற்றம் என்ன? அவர்கள்மீது போடப்பட்ட வழக்கு என்ன? என்றாவது விசாரணையாவது நடக்குமா?

தெரியாது ... தெரியாது...

மத்திய சிறைக் கொட்டடிகளில் அடைக்கப்பட்ட அரசியல் கைதிகளின் எதிர்காலம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே இருள் மயமாகத்தான் இருந்தது — இட்லர் ஆட்சியில் சிறைகளில் அடைக்கப்பட்ட யூதர்கள், கம்யூனிஸ்டுகள் ஆகியோரின் எதிர்காலத்தைப்போல!

சிறையில் அவர்கள் அடைக்கப்பட்ட மறுநாளே—

—"அருகே என் அன்புத் தம்பி! ஆமாம் ஸ்டாலின் தான்; தமிழகத்து முதல் அமைச்சரின் மகன் என்று நேற்றுவரை அறிந்த அந்த ஆசிரியன் (சுருளிராஜன்) தன் கால் பூட்சால் அவன் அழகிய முகத்தைச் சுவை பார்க்க உதைத்தான். அடுத்து கொலைகாரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள்பட்டையில்! காக்கி உடை அணிந்த வார்டன் ஒருவன் கன்னத்தில் கைநீட்டினான்...

இவர்கள் இவனை அடித்தே கொன்றுவிடுவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது! மற்றவர்கள் தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனரே ... உதவிக்கு எழ முடியாதபடி அருகில் எமதூதர்கள்! என்ன செய்வது. எனக்கென்று ஓர் துணிவு! திடீர் என்று குறுக்கே பாய்ந்தேன்! தம்பியை தாங்கிக் கொண்டே, தடிகள் கழுத்தில்!

அவைகள் அடிகள் அல்ல! உலைக்களத்தில் பழுக்கக்காய்ச்சிய இரும்பைத் தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாறி விழும் சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது கழுத்தில் அத்தனையையும் தாங்கிக் கொண்டேன்.........வீராசாமியைத் தூக்கி நிறுத்தி ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினர்...என்னை ஒருவன் "வாடா தம்பி வா!" என்று ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினான்...... அடுத்துவிட்டான், ஒரு குத்து. அவ்வளவுதான். எதிர்பாராத தாக்குதல் அல்லவா! தச்சுத் தொழிற்கூடத்திற்கு அருகில் தரையில் தொப்பென்று வீழ்ந்தேன்! வெள்ளுடை வேந்தர்கள் பலர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள், கையில் தடியுடன்! கிடைத்த அடிகள் அனைத்தும் இடுப்புக்குக் கீழே'...

[சிட்டிபாபுவின் சிறைக் குறிப்புகளிலிருந்து]

வயதானவர் என்று கூடப் பார்க்காமல்—நெல்லை ஜெபமணி போன்றவர்களைக்கூட—அவர்கள் விட்டுவைக்கவில்லை.

"—ஒன்பதாவது பிளாக் என்றாலே உதைக்கும் பிளாக் என்றுதான் சிறையில் பொருள். அடியா அடித்தார்......இடிபோல் அல்லவா தாக்கினார்கள்..."

[நெல்லை ஜெபமணி]

மன்னிப்புக் கடிதங்கள் எழுதித் தரச் சொல்லித் துன்புறுத்தியிருக்கிறார்கள் அதிகாரிகள். அதற்காக அவர்கள் கையாண்ட முறைகளும், மிரட்டல்களும் பயங்கரமானவைகள்:

—"மன்னிப்புக்கடிதம் எழுதிக் கொடுக்காவிட்டால், உன் நெற்றிப்பொட்டுகளில் தடியால் குத்தியே உயிரைப் போக்கிவிடுவோம்; அப்படி உயிர் போகாவிட்டாலும், நிச்சயம் பைத்தியம் பிடிக்கும்..." என்று மிரட்டியிருக்கிறார்கள். அவ்வாறே செய்யவும் தயங்காதவர்கள் அந்த அதிகாரிகள்.

இடது கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர் சிவாஜியின்

(9-ம் பக்கம் பார்க்க)

அரிய வாய்ப்பு, குறுகிய சந்தர்ப்பம்

எங்களது தவணைமுறை
திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்!

**எம். கே. டிரேடர்ஸ்,**

41, ரங்கராஜபுரம் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.

—: கிளை :—

50, ஏரிக்கரைத் தெரு மேற்கு மாம்பலம். சென்னை-33.

எங்களிடம் ரேடியோ, டிரான்சிஸ்டர், ஸ்டீல்பீரோ சைக்கிள் சோபா மின்விசிறி மற்றும் வீட்டுக்கு தேவையான எல்லா பொருட்களும் ரொக்கத்திற்கும் தவணை முறையிலும் கிடைக்கும்

உரிமையாளர் :— O. Y. A. முகமது மைதீன்.

★★★★★-★★★★★★★

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

**புதிய சந்தா விவரம்**

ஓராண்டு சந்தா ரூ. 25.00

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு.
அன்பகம், சென்னை-600018

★★★★★-★★★★★★★

# பத்திரிகையாளர் உரிமையைப் பறித்த இந்திரா!

**இந்தியாவின் இருண்ட காலத்தின்போது இந்திராவோடு ஒத்துவராத ஐம்பத்தொரு பத்திரிகையாளர்கள் தங்கள் அங்கீகாரத்தை இழந்தார்கள். மீண்டும் தங்களுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென முப்பத்தொரு பத்திரிகையாளர்கள் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். அவர்களுடைய வேண்டுகோளை அரசு ஏற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குமூலங்களும் சகிக்க முடியாத கொடுமைகள் சிறையில் நடந்தன என்பதை மெய்ப்பிக்கின்றன.

1976-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ஆம் தேதி இரவே வேட்டை தீவிரமாகத்துவங்குகிறது...மறுநாள் — பிப்ரவரி முதல் தேதியிலிருந்து—அவர்கள் சிறைக் கொட்டடிகளில் அடைக்கப்படுகிறார்கள்; எங்கு தெரியுமா? ஏற்கனவே குட்டரோகிகள் இருந்த சீழ்வடியும், நோய்க் கிருமிகள் அகலாத ஒன்பதாவது பிளாக்கில்! அதற்கடுத்த நாளே—பிப்ரவரி இரண்டாம் தேதி—அடித்துத் துன்புறுத்தும் சித்திரவதைப் படலம் ஆரம்பமாகிவிடுகிறது...

'கைதிகள் தங்கள் அறைகளுக்குள்ளே போக மறுத்ததால்தான் சிறிது பலாத்காரம் செய்ய வேண்டி இருந்தது' என்ற அதிகாரிகளின் கூற்று பொய் என்று நிராகரித்த நீதிபதி இஸ்மாயில், "அவைகள் ஏற்கனவே திட்டமிட்ட, ஈவிரக்கமற்ற தாக்குதல்கள்" என்று தம் அறிக்கையில் கூறுகிறார்.

மிருகத்தனமான தாக்குதல்கள் மட்டுமல்ல—உணவில் அளவுக்கதிகமான உப்பைப் போடுதல், வேப்பெண்ணையைக் கலத்தல், சிறுநீர் கலக்கப்பட்ட மண்ணை உணவில் போடுதல்—போன்ற கற்பனை கூடச் செய்துபார்க்க முடியாத கொடுமைகளும் நடந்துள்ளன. மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படும் நிலையிலிருந்த கைதிகளுக்கு அவை மறுக்கப்பட்டன; வேண்டுமென்றே தாமதமாகத்தரப்பட்டன.

'இந்த மத்திய சிறைச்சாலையில் மன்னர்களுக்கெல்லாம் மன்னன் நானே' — என்று கொக்கரித்த சிறை அதிகாரியான வித்யாசாகர்தான் "நடந்த எல்லா சித்திரவதைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் காரணம்" என்று நீதிபதி இஸ்மாயிலின் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

'சிறை அதிகாரிகள் அரசியல் கைதிகளை ஈவிரக்க மற்று அடிப்பதை வாடிக்கையாகவே கொண்டிருந்திருக்கிறார்கள் என நான் கருதுகிறேன்' என்று நீதிபதி இஸ்மாயில் கூறியுள்ளார்.

—மேலும் ஒரு 'நரகமாகவே' கைதிகளுக்கு இருந்த 9-வது பிளாக்கில் என்ன நடந்தாலும் பிற பிளாக்கிலிருப்பவர்களுக்குத் தெரியாது.

வித்தியாசாகரின் அத்துமீறல்களுக்கு ஒரு அளவே இருந்ததில்லை; மத்திய சிறையில் உண்மையிலேயே தட்டிக் கேட்க முடியாத ஒரு 'மன்னாதி மன்னனாகவே' இருந்தார் அவர்.

இடது கம்யூனிஸ்ட் கட்சித் தோழரான எஸ். சி சிவாஜி அடைக்கப்பட்ட அறைக்குள் புகுந்த வித்தியாசாகர் சிவாஜியின் நோட்—புத்தகம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் குழுவிற்கு எழுதிய விண்ணப்பம் (சிறைக் கொடுமைகளை விவரித்து) சிறை சீர்திருத்த குழுவிற்கு எழுதிய கடிதம்—இன்னும் சில விண்ணப்பங்கள் அனைத்தையும் பறித்துச் சென்றுள்ளார்.

அன்றைய சிறை இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த பரமகுரு, போலீஸ் கமிஷனர் கிருஷ்ணசாமி—போன்ற அதிகாரிகள் பொறுப்பற்றவர்களாக, அதிகார அத்துமீறல்கள் செய்தவர்களாக வித்யாசாகரின் மிருகத்தனங்களைக் கண்டும் காணாதவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அவர்கள் அதிகாரிகள் என்ற போதும் குற்றமிழைத்தவர்களே; அவர்கள் இன்னும் தண்டிக்கப்படாமல் இருப்பது ஏன் என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது. மக்களின் பிரதிநிதிகள்தான் ஆட்சியாளர்கள் என்பது உண்மையானால், மக்களுக்குத் தீமை இழைத்தகுற்றவாளிகள்-அவர்கள் யாராக, எந்தப் பதவியில் இருப்பவர்களானாலும்— தண்டிக்கப்பட்டேயாக வேண்டும். காலம் தாழ்த்தினால், குற்றவாளிகளைத் தண்டிக்கும் உரிமையை மக்களே எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும்.

நேற்றைய ஆட்சியாளர்கள் இன்றைய சிறைப்பறவைகள் ஆவதும், இன்றைய சிறைப்பறவைகள் நாளைய ஆட்சியாளர்களாகமாறுவதும் சுழலும் சரித்திர சக்கரத்தில் மாறி மாறி நடக்கும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகள்—எனவே, 'குற்றவாளிகளைத் தண்டித்தால் அது எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்குப் பணிந்ததைப்போல் ஆகிவிடுமே... என்று 'கௌரவப் பிரச்சினையாக' எடுத்துக் கொண்டு குற்றவாளிகளைத் தண்டிப்பதில் தயக்கம் காட்டக் கூடாது.

இன்று குற்றமிழைத்த அதிகாரிகளுக்கு வழங்கப்படும் தண்டனை அடுத்து வரும் அதிகாரிகளுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

—சிறைச்சாலைகளைச் சீர்திருத்த வேண்டுமென்றும், கைதிகளை மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும் என்றும் எவ்வளவோ முறைகள், எத்தனையோ அறிஞர்கள் எழுதி விட்டார்கள்; பேசிவிட்டார்கள்; சிறை சீர்த்திருத்தக் குழுக்கள் கூட அமைக்கப்பட்டு விட்டன;

—என்ன மாற்றம் ஏற்பட்டு விட்டதாம்?

சிறைக் கொட்டடியில் சிறு அறையில் இன்றும் கூட ஒன்பது பத்து பேர்கள்! அடைக்கப்படுகின்றனர்; 1857—ஆம் ஆண்டு கட்டப்பட்ட சென்னை மத்தியசிறைச்சாலை மிகுந்த மோசமான நிலையில் இருப்பதாக நீதிபதி இஸ்மாயில் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல—

இந்தியச் சிறைச்சாலைகளில் பெரும்பான்மையானவைகள் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவைகளே!

சிறைக் கைதிகளுக்கிருக்கும் வசதிகள், அவர்களின் உடல் நலன், குறைபாடுகள் ஆகியவைகளை 'விசாரித்து' வேண்டிய உதவி செய்ய நீதிபதிகள், உயர் அதிகாரிகள் அவ்வப்போது சிறைச்சாலைகளுக்கு நேரடியாக வரத்தான் செய்கின்றனர்...

ஆனால் அவர்கள் அப்படி வந்து — கைதிகள் தங்கள் குறைகளை வெளியிட்டபிறகு என்ன நடக்கிறது'

சிறைக் கொடுமைகள் குறித்து விசாரணை நடத்திய போது, நீதிபதி இஸ்மாயில் மத்திய சிறையைப் பார்வையிடச்சென்றார்; அப்போது அங்கிருந்த கைதிகள் அவரிடம் தங்கள் குறைகளைச் சொன்னார்கள்; நீதிபதி போனபிறகு குறைகளை வெளியிட்ட கைதிகள் குருதி சொட்டச்சொட்ட அடிக்கப்பட்டு, வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டார்கள்.

அமைச்சர் இராமச்சந்திரன் சென்றபோது குறைகளைச் சொன்னதற்காகக் கைதிகள் தாக்கப்பட்டார்கள்

கோவை மத்திய சிறைக்கு அமைச்சர் குழந்தைவேலு போயிருந்தபோது அவரிடம் குறைகளைச் சொன்ன கைதிகளும் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள்.

சிறைகள் உண்மையிலேயே சீர்திருத்தக் கூடங்களாகமாறி கைதிகளை வெளியே அனுப்பும்போது, அவர்களைப் புது வாழ்வைத் துவங்குவதற்கான நம்பிக்கையையும் நல்லதுணைத்தையும் கொண்டவர்களாக, புத்துயிர் பெற்றவர்களாக மாற்ற வேண்டுமானால்—

சிறை அதிகாரியாக நியமிக்கப்படும் ஒரு மனிதரின் முதல் தகுதியாக அவருக்குக் கொஞ்சமேனும் 'மனிதாபிமானம்' இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்! வித்யாசாகரைப் போன்ற பிறழ்நிலை மனம் கொண்டவரையோ (Abnormal) வக்கரித்த (Perverts) மனிதர்களையோ சிறை அதிகாரிகளாக்கினால், எவ்வளவுதான் சீர்திருத்தச் சட்டங்கள் தீட்டினாலும் அவ்வளவும் விழலுக்கிறைத்த நீராகி — சிறைச்சாலைகள் என்றென்றும் மண்ணுலகத்து 'நரகங்களாகவே' இருக்கும்! ★

# வந்த மடல்

## கலைஞரின்

## 'சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள்'

இந்திரா தமிழகத்திற்கு வந்திருந்தபொழுது தி. க., தி. மு. கழகத் தலைவர்களும், தொண்டர்களும் கறுப்புக் கொடி போராட்டத்தில் இறங்கினார்கள். சனநாயக நாட்டில் உள்ள உரிமை அது என்றாலும் தலைவர்கள் மீதும், தொண்டர்கள்மீதும் தவறான வழக்குகளை ஜோடனை செய்து அவர்களைச் சிறையிட்டது இன்றைய அரசு

கலைஞர் சிறையில் அடைபட்டிருந்த காலத்தில் அவரது அறிவார்ந்த சிந்தனைத் தோட்டத்தில் பூத்த 81 தத்துவ மலர்களை 'சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள்' எனும் பெயரில் அருமையான நூல் வடிவாக வெளியிட்டிருக்கிறார்கள் மோனா பப்ளிகேசன்சார்.

தாக்குபவனுடைய மொழி நளினம் தாக்கப்படுகின்றவனையும் சுவைக்கவைக்கவேண்டும். கலைஞருக்கு அது கைவந்த கலை எழுத்தானாலும், மேடைப் பேச்சானாலும் மாற்றானும் சுவைக்கும் நாகரிகத்தை - ஒரு நளினத்தை இலாவகமாகக் கையாளும் தனித்தன்மை வாய்ந்தவர்.

அதைத் தமிழுலகம் நன்கறியும்.

"சிறையிலிருந்த ஓர் அரசியல் கைதிக்கு நாவல்கள் படிப்பதிலோ, இலக்கியங்கள் படிப்பதிலோ நாட்டமில்லை. நெப்போலியன், அலெக்சாண்டர், லெனின், நேரு, நேத்தாஜி, கட்டபொம்மன், பகவத் சிங் சிதம்பரனார் போன்றவர்களின் தியாக வரலாறுகளையும்— வீர வரலாறுகளையும் தவிர வேறு எந்த நூலையும் அவர் கையால் தொடுவதில்லை. இப்படி, அந்த மாவீரர்களின் சரித்திரங்களைப் படித்துக் கொண்டிருந்தவரை, ஒருநாள் காலை சிறைக்கூண்டில் காணவில்லை. எங்கே என்று விசாரித்தபோது மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வெளியே போய் விட்டார் என்று சிறைக்காவலர் ஒருவர் விடையளித்தார்."

கலைஞர் யாரைக் குறிப்பிட்டு மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா? "பெரியார்—அண்ணா பாசறையில்வளர்ந்தவர்களில் சிலர் இடைக்காலத்தில் இப்படியும் சோடை போய்விட்டார்களே!" என்ற அங்கலாய்ப்பும் உள்ளிருக்கிறது.

பாதித் துன்பத்திற்கு நம்முடன் இருந்துவிட்டு மீதித் துன்பத்தையும் எதிர்நோக்கும் மனத்துணிவின்றி இன்பம் துய்க்க 'இடம்' தேடிப்போன அந்த அவர்களேகூட வெட்கப்பட வைக்கும் எழுத்துத் திறன் என்னே!

தழை இலைகளைத் தின்று கொழு கொழுவென்று வளர்ந்திருக்கும் வெள்ளாட்டை கொடிய வேங்கை பாய்ந்து — பலியாக்கிவிடக்கூடாதே என்பதில் வெள்ளாட்டினை உடைமையாகக் கொண்டவன் எச்சரிக்கையாய் இருப்பது எந்தவிதத்திலும் வெறி ஆகிவிடாது.

பலர் தங்களது மொழியைப் பிறர்மீது பலவந்தமாகத் திணிக்கப் பார்க்கிறார்கள் நாம் அதில் எச்சரிக்கையாய் இருக்கிறோம்.

இவற்றில் எது வெறி?

கலைஞர் கேட்கிறார்:—'தளதளவென்றிருக்கிற வேப்பமரத்தில் ஒரு குச்சியை ஒடித்துப் பல்துலக்கினால் அந்தக் குச்சி, தன் மனக் கசப்பைக் காட்டிக் கொள்கிறது.

தமிழ் மொழியின் எதிர்காலம் திட்டமிட்டு ஒடிக்கப்படுகிறது தமிழர்கள் கசப்பைக் காட்டிக் கொள்ளக்கூட உரிமையில்லையாம்.

வேம்பிலும் தாழ்ந்தவனா தமிழன்?'

நியாயமான உரிமைக்கு நேர்மையான குரல் கலைஞரின் குரல்- நம்மைப் பிரிவினைவாதிகள் என்றும் பிராந்திய மொழி வெறியர்கள் என்றும் பின் தள்ளப் பார்ப்பவர்களுக்கு "நமது நிலைமை இதுதான்" என்று இதைவிட வேறு எந்த உவமை மூலமும் தெள்ளத் தெளிவாக்கிட முடியாது.

இதைப் போன்று பலப்பல சின்னச் சின்ன மலர்கள் (81 தத்துவ மலர்கள்) ஒரு மாலையாக தொடுக்கப்பட்டிருக்கின்றன.

குறைந்த விலை நிறைந்த பொருளடக்கம்.

உடன்பிறப்புக்கள் ஒவ்வொருவரும் —ஏன் அறிவை நாடும் ஒவ்வொரு தமிழனும் விரும்பிப் பெற வேண்டிய நூல்.

—தமிழ்மார்பன்,
பொள்ளாச்சி.



# "சூடு சொரணை இல்லாத..."

**"சூடு சொரணை இல்லாத ஜனதாத் தலைவர்கள் எந்த யாற்றத்தையும் செய்யமாட்டார்கள்."**

பிப்ரவரி 27ஆம் தேதியிட்ட மாலை ஏடு ஒன்றில் வெளிவந்த தலைப்புச் செய்தியே மேலே இருப்பது!

இந்தப் பண்பான வாசகங்களைச் சொல்லி இருப்பவர் முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி!

இந்திராகாந்தியா? இப்படியும் சொல்லியிருப்பாரா? சே...சே...மாட்டார்! என்னதான் ஜனதாமீது எரிச்சல் இருந்தாலும் நேருவின் புதல்வி வாயிலிருந்து வரக்கூடிய சொற்களா இவை?

சாட்சாத் அவரே சொன்னதாகத்தான் அந்த ஏடு போட்டிருக்கிறது! இந்திரா அம்மைக்கு மிகவும் வேண்டிய செய்தித்தாள் அது. ஆட்சித் தலைவியாக அவரே இந்தநாட்டுக்கு மீண்டும் வரவேண்டும் எனத் தவங்கிடக்கும் நாளேட்டில் தவறான செய்தி வர இடமுண்டோ? ஒருக்காலும் இருக்காது! எனவே, அன்னையே திருவாய் மலர்ந்து அருளிய வாசகமே இது என ஒத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை!

'கர்நாடகத்தில் மக்கள் தந்த தீர்ப்பின் விளைவாக இந்திராவுக்கெதிரான மத்திய அரசின் கெடுபிடிப் போக்கில் ஏதேனும் மாற்றம் இருக்குமா' — என்பது அந்த ஏட்டாளர் தொலைபேசி மூலம் மோதிலாலின் பேத்தியிடம் கேட்ட கேள்வி. அவர் அதற்கு அளித்த பதிலோ, 'சூடு சொரணையில்லாத ஜனதாத் தலைவர்கள்......!' என்பது.

கேள்விக்கும் பதிலுக்கும் நேரடிப் பொருத்தமில்லை என்பது வெளிப்படை. பதில் எதுவானாலும் பண்பான வார்த்தைகளால் அதை வெளிப்படுத்தி இருக்கலாம். அதுவும் தேர்தல் களத்தில் வெற்றிக்கனியைப் பறித்த நேரத்தில் ஒருவருக்குக் கட்டாயம் இருந்திருக்க வேண்டிய நிதானத்தை இந்த வார்த்தைகளில் காணோமே!

பெருந்தன்மையைக் காட்டிட வேண்டிய நிலையிலும் ஆத்திரம் பொங்கி வழிவதும் தடித்த வார்த்தைகளால் பதில் தரப்பட்டு இருப்பதும், ஏதோ ஓர் அளவுகடந்த ஆத்திரம்—தன் தரத்திற்கு, மீறிய கொதிப்பு — தாங்க முடியாத மன எரிச்சல் — வரம்பைத் தாண்டிய சொற்களாக வடிந்துள்ளது என்பதையே அந்த வாசகம் காட்டுகிறது!

கருதிப் பேசப்பட்ட வாசகம் அல்ல அது; காறி உமிழப்பட்ட எச்சிலே! பேசியவர் பெரியவர்; பேசப்பட்ட வார்த்தைகளோ சிறியவை; மிக மிகச் சிறியவை!

இப்படி ஒரு தரமிழந்த வாசகத்தை அம்மையார் உமிழக் காரணம் என்ன? தம்மைத் தாராளமாக உலவவிட்டுக் கொண்டிருக்கும் ஜனதாவுக்கு, எதிராக, அம்மையாரால் எப்படி, இப்படிப் பேச முடிகிறது? மன்னிக்கவும், ஏச முடிகிறது?

விருப்பப்படி எங்கும் போகலாம்; வேண்டாமென்று தடுத்தால் நீதி மன்றம் செல்லலாம்!

எதையும் பேசலாம்: எங்கும் பேசலாம்; எவரைப் பற்றியும் பேசலாம்!

கைது செய்தால் 'ஜாமீன்' கேட்கலாம்!

சாட்சியம் கேட்டால் கொடுக்க மறுக்கலாம்!

சம்மன் வந்தாலும் 'ஆஜராகாமல் இருக்க அனுமதி பெறலாம்!

அதிகார வர்க்கம் தன்னை எங்கும் கடத்திக் கொண்டு போக முடியாது; அப்படிச் செய்தால் 'ஏபியஸ்கார்பஸ்' மனுப் போடலாம்!

அடுத்து ஆட்சிக்கு நான்தான் வருவேன் என்று பேசலாம்; என்றைக்கும் வரமாட்டேன் என்று மாற்றியும் பேசலாம்! எப்படிப் பேசினாலும் எவரும் ஏன் என்று கேட்க மாட்டார்கள்! இழித்தும் பழித்தும்-எதுவும் எங்கும்— ஒலிபெருக்கியில் கொட்டி முழக்கலாம்! பத்திரிகையில் கொட்டை எழுத்தில் வெளிவரும்! யாரும் தணிக்கை செய்ய மாட்டார்கள்! பேசியதற்காகக் கைது செய்யமாட்டார்கள்!

வரம்பு மீறிய சொல்லுக்கு —சட்டத்திற்குப் புறம்பான செய்கைக்கு —என்று கைது செய்யப்படுவதாக இருந்தாலும் காரணம் காட்டியாக வேண்டும்!

காரணமில்லாமல் எவரையும் கைது செய்ய முடியாது! சட்டப்படி, கூடாது!

கால வரம்பில்லாமல் சிறையிலே பூட்ட முடியாது! நீதி மன்றம் அதை அனுமதிக்காது!

## செகந்தப்பன்

நீதிதேவன் முன்னால் ஆதாரங்களைக் காட்டி வாதப்பிரதிவாதங்கள் நடத்திய பின்னாலேயே ஒருவரைத் தண்டிக்க முடியும்!

தண்டனையும் இன்னது என்று நிர்ணயிக்கப்பட்டாக வேண்டும்!

தண்டிக்கப்பட்டவர் 'அப்பீல்' செய்யலாம்!

தாராளமாக நடமாட 'ஜாமீன்' பெறலாம்!

தமக்கென வாதாடும் வக்கீலை எவரும் மிரட்ட மாட்டார்கள்!

வழக்கு நடப்பது சட்டப்படி நியாயமாகவே இருந்தாலும், நடைபெறும் நீதி மன்றத்தின் முன்னாலே மக்கள் கூட்டத்தைத் திரட்டி, நடப்பது தவறு என்று கூச்சல் போட வழியுண்டு!

அப்பப்பா... எத்தனை உரிமைகள்! அதிலே ஒன்றுகூட 'இந்தச் சூடு சொரணை இல்லாத' ஜனதாத் தலைவர்களுக்கு அம்மையார் ஆட்சியிலே கிடையாது.

அன்று எவரையும் காரணமின்றிக் கைது செய்யலாம்! ஒருவன் வெளியே இருப்பது நெருக்கடிக்குக் கொஞ்சம் இடைஞ்சலாகத் தெரிகிறது என்று மட்டும் அதை அமுல் நடத்தும் அதிகாரி எழுதி வைத்துக்கொண்டால் போதும்!

கைது செய்தவரை நீதி மன்றம் கொண்டு செல்லவும் மாட்டார்கள்; அவராகப் போகவும் கூடாது!

தாம் எதற்காகச் சிறைப் பிடிக்கப்பட்டோம்என்று கூட அவருக்குத் தெரிவிக்கப்பட மாட்டாது; தண்டனைக் காலமும் நிச்சயமில்லை!

கொலைக்காரனுக்குக் கூட நிபந்தனை ஜாமீனாவது கிட்டும்! மிசாக் கைதியோ ஜாமீன் கேட்கவே கூடாது.

கொலைகாரன் கைது செய்யப்பட்டது பத்திரிகையிலே வரும்! ஆனால் வெள்ளையனை எதிர்த்து தியாகம்செய்த தலைவராகவே இருந்தாலும் அவர் கைதானது பத்திரிகையிலே வராமல் தடுக்கப்படும்! வந்தால் அரசுக்குத் தொல்லை என்று தணிக்கை அதைத் தடுத்துவிடும்!

கொள்ளைக்காரன் ஒருவன் சிறை வைக்கப்பட்டால் அது எந்தச் சிறை என்பது மூடி மறைக்கப்படும் செய்தியாக இராது. ஆனால் கைதான ஓர் அரசியல்வாதி எங்கிருக்கிறான் என்பது பரம ரகசியமாகக் கட்டிக் காக்கப்படும்! தெரிந்தால் சட்டம் ஒழுங்கு குலைந்துவிடுமாம்!

செய்யாத குற்றத்தைச் செய்ததாகச்செய்தியேடுகளும் வானொலியும், தொலைக் காட்சியும் நாள்தோறும் ஒரு நல்லவனுக்கு —ஆனால் அரசுக்கு ஆகாதவனுக்கு எதிராகச் சேற்றை வாரி வீசும்! 'ஐயோ நான் இதைச் செய்யவில்லை' என அலறவும் அந்த மனிதனுக்கு உரிமை இருக்காது! மீறிக் கத்தினாலும் வெளியுலகுக்குக் கேட்காது; ஏடுகளில் வராது! அவன் என்ன கோட்டானா தன் இச்சைப்படி அலறுவதற்கு' எல்லா உரிமைகளும் படைத்த படைப்புகளுள் உயர்ந்த மனிதப் படைப்பல்லவா? எனவே அந்த உரிமை அவனுக்குக் கிடையாது.

நெருக்கடி காலத்தில் அரசு ஒருவனைச் சாகடித்தால் கூட நீதி மன்றத்தில் போய் ஏன் என்று கேட்கக் கூடாதா என்ற விசித்திரமான கேள்வி நீதிமன்றத்திலேயே அன்றைக்குக் கேட்கப்பட்டது! கூடாது' என்ற 'தெளிவான' பதில் அரசுத் தரப்பில் அதற்குத் தரப்பட்டது!

இவ்வளவையும் தாங்கிக் கொண்ட ஜனதாத் தலைவர்கள், 'சூடு சொரணை இல்லாதவர்களாகத்தானே' இருக்க வேண்டும்?

சரி போகட்டும்; அன்றுதான் அவர்களுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டு இருந்தது. கைகால்களுக்குக் காப்பும், உடம்புக்குத் தடுப்புச் சுவரும் அவர்தம் செயல்களுக்கு இடையூறாக இருந்தன; தீராத விபத்திலே இருந்து மீண்ட பிறகு; இன்றைக்கு மட்டும் என்ன வாழ்கிறது? சூடு சொரணை இருந்தால், நாட்டிலே உலவிய சர்வாதிகார நச்சரவத்தை, விசாரித்த பின்னரே தண்டிக்கப் போகிறோம் என்று விவஸ்தையின்றிக் கூறுவார்களா?

அரவத்தால் தீண்டப்பட்டவன் எப்படியோ தப்பிப் பிழைத்து ஆட்சியிலும் அமர்ந்துவிட்டபிறகு அரவம் என்னை தீண்டியதற்கு ஆதாரத்தைத் திரட்டுகிறேன் என்கிறான்! சூடு உள்ளவன் செய்கிற காரியமா இது?

சர்வாதிகாரியை சனநாயக முறைகள் அழிப்பதுண்டா? சாக்கடையைப்பன்னீர்எப்படி சமாளிக்கும்? சந்தனத்தைக் கழிவரைச்சுவரிலா தடவுவார்கள்? கழுதைக்கா கற்பூரத்தைக் காட்டுவார்கள்?

'நக்குகிற நாய்க்குச் செக்கும் சிவலிங்கமும் ஒன்றுதான்' என்பது பழமொழி. ஆனால் நாடாளும் நாயகனுக்குச் சர்வாதிகாரமும் சனநாயகமும் எப்படி ஒன்றாக முடியும்?

சனநாயகத்தை மதிக்கும் ஓர் அரசு மறைந்து விட்டால் சர்வாதிகாரம் செத்து விட்டதாகக் கருதுவது பேதமை! சர்வாதிகாரியை நடமாட விடுவது ஏமாளித்தனம்!

சர்வாதிகாரி நடமாடும் வரை — சர்வாதிகாரம் நீறு பூத்த நெருப்பாகக் காலம் பார்த்திருக்கும்! காரணத்தை அழிக்காமல், காரியத்தை இனி என்றும் தலைதூக்க முடியாத ஒன்று என உதாசீனப்படுத்துவது முட்டாள்தனம்

சர்வாதிகாரத்திற்கு 'இட்டதே சட்டம்' என்பதே விதி! சனநாயகத்திற்கோ ஆயிரம் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி நிற்கும் விதிமுறைகள் உண்டு! இந்தப் பறவையால் அந்தப்பருந்தை வீழ்த்த முடியாது!

எனவே சனநாயக வழிமுறைகள் சர்வாதிகாரியைத் தண்டிக்கப் போதுமானவை அல்ல! நாட்டு நலன் கருதி அதற்குத் தனி வழி வகுக்கப்பட வேண்டும், நாடாளுமன்றம் அதற்குவகை செய்ய வேண்டும். ஏற்கனவே செய்யப்பட்டிருக்க வேண்டும்!

அதை விடுத்து குருவியை விரட்டும் கவண் கல்லைக் கையிலே வைத்துக்கொண்டு

(11-ம் பக்கம் பார்க்க)

## உரிமைகளை உறிஞ்சும் கடற்பஞ்சு!

மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டு நடந்தப்பட்டு வந்த நிர்வாகம், மாகாணங்களின் தனித் தேவைகளைத் தொடர்ந்து உதாசீனப்படுத்தி, எப்படி இந்தியாவில் உண்மையான தேசியம் வளர்வதற்கு இடையூறாக இருந்தது என்பதை அரசிலறிஞர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அதிகாரக் குவிப்பு என்னும் அந்த நசுக்கும் எந்திரம் கடந்த ஒன்றரை நூற்றாண்டுக்காலமாக உருண்டோடி மாகாணங்களின் தனித்தன்மையையும், தானே முயற்சி மேற்கொள்ளும் மனப்பான்மையும் அடியோடு கொன்றுவிட்டது. தனது பகுதிகளுக்கு (மாகாணங்களுக்கு) ஊட்டத்தையும், சக்தியையும் கொடுப்பதற்குப் பதிலாக மத்திய அரசு ஒரு இராட்சசக் கடற்பஞ்சு மாதிரி செயல்பட்டு கடந்த காலத்தில் மகாணங்களிடமிருந்த எல்லாச் சுதந்திரத்தையும். தானே முயற்சி மேற்கொள்ளும் மனப்பான்மையையும் உறிஞ்சி விட்டது.

—ஷாபஃட் அகமத்கான்


உதயசூரியன் மோதிரம்



1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பல்லாயிரக் கணக்கான இயக்க தோழர்களின் கரங்களில் கலைபாழியாக திகழ்ந்த உதய சூரியன் மோதிரத்தை பேரறிஞர் அண்ணாவும், தமிழகத் தலைவர் கலைஞரும் கண்டு பூரிப்பு அடைந்தார்கள். மீண்டும் அந்தவெற்றிச் சின்னம் உதய சூரியன் மோதிரத்தை முழுதும் பஞ்சலோகத்தால் தாயரித்து 'வாழ்க கலைஞர்' என்று பொறித்து தருகிறோம். ஒரு மோதிரம் விலை ரூ. 15.00 தபால் செலவு 3-50 தனி. உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து ரூ. 3.00 அட்வான்சுடன் அனுப்பினால் மீதித் தொகைக்கு மோதிரத்தை V.P.P. மூலம் அனுப்புகிறோம்.

சக்தி ஜி. சம்பந்தன்
42, பள்ளிக் கூடம் தெரு,
பட்டாபிராம், சென்னை-600072

சென்னையில் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் சென்றும் மோதிரத்தை பெற்றுக்கொள்ளலாம்.
போட்டோ வினஸ்,
104, C. N. K. ரோட் - சென்னை-5.
CINEMA SLIDE, OUTDOOR FLASH PHOTOS ETC.

# சூடு சொரணை இல்லாத...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கத்தை வீழ்த்துகிறேன் பார் என்ருல், பார்ப்பவர்கள் சிரிக்க மாட்டார்களா?

சிங்கத்திற்குப் பயந்தவர்கள் தம்மைக் காப்பாற்ற வந்தது கூறிய தந்தங்களைக் கொண்ட யானை அல்ல, ஒரு நரியே என்று தெரிந்தும் மீண்டும் திசை தெரியாமல் சிங்கம் இருக்கும் குகைப்பக்கமே ஓடுகிருர்கள்! இதைப் பார்த்த சிங்கமோ சிரிக்கிறது! 'சூடு சொரணை இல்லாத ஜனதா' என்று யானையைப் பரிகசிக்கிறது! பாராட்டவா செய்யும்? எவர்தான் பாராட்ட முடியும்?

அதன் ஆதிக்க அட்டகாசத்திற்கு ஆளான மக்கள் சிங்கத்தைப் பதவி இறக்கம் செய்தார்கள். கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல்! ஒதுக்கிட வேண்டிய கடமை பூண்ட அரசோ, சட்டமுறை என்னும் தவளையை ஏவி வட்டமிடும் கழுகை வீழ்த்தப்போகிறேன் என்று ஜம்பமடித்துக் கொண்டுள்ளது.

சர்வாதிகாரத்தை வீழ்த்திய பெருமை நாட்டு மக்களைச் சாரும்! சர்வாதிகாரியை வீழ்த்திட வேண்டிய அரசோ சரியான வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத் தவறிவிட்டது!

யானையின் கூறிய தந்தங்களால் தாக்குண்டு, துதிக்கையால் தூக்கி எறியப்பட்டு, காலால் மிதியுண்டு தான் செய்த தவறுகளுக்குச் சரியான தண்டனையைப் பெறப் போகிருேம் என முதலில் அஞ்சிய சிங்கமோ இப்போது அந்தச் சங்கடத்திலிருந்து மீண்டு விட்டது!

யானையோ சிங்கத்தைப் பார்த்து உன்னைக் காயம்படாமல் தண்டிக்கப்போகிறேன் என்கிறது! காயப்படுத்துவதற்கோ, ஏன்—துன்பப்படுத்துவதற்கோ கூட என் சட்டத்தில் இடமில்லை என்கிறது! நீ யார்—யாரை எங்கெங்கு வீழ்த்தினுய் என்பதைச் சட்டப்படிக் கணக்கெடுத்தாக வேண்டும் என்கிறது! அதுவரை பொறு என வேண்டுகிறது! நீ தான் பலரை வீழ்த்தினுயா என்பதும் ஆதாரத்தோடு தெரிந்தாக வேண்டும் என அங்கலாய்க்கிறது யானை!

இதைக் கேட்டுச் சிங்கம் சிரிக்காமல் என்ன செய்யும்? யானையின் பேதமையைப் பார்த்தால் அதற்கு ஏளனமாகத் தெரிகிறது அதுவும் தன்னிடமே ஒருமுறை தாக்குண்ட யானைக்கு சூடு சொரணை இருந்தால் இவ்வளவு வெளிப்படையாகத் தெரியும் உண்மைக்குச் சட்டத்தில் ஆதாரம் தேடுமா என்றெண்ணி அது விலா நோகச் சிரித்துக்கொண்டு நிற்கிறது; எள்ளிநகையாடுகிறது.

ஆட்சியின் ஆுநத அலங்கோலத்தை ஓராண்டு காலமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் பரவசப்படவா முடியும்? ஆயாசப்படுகிருர்கள்! வேறு வழியில்லாமல் அவர்தம் சிந்தனை ஓட்டம் திசைமாறிப் போகிறது!

யானையை ஆதரிக்காவிட்டால் பரவாயில்லை; அது நம்மை ஒன்றும் செய்யப்போவதில்லை! சட்டத்தில் இடமிருந்தாலன்றி ஒரு சர்வாதிகாரியைக்கூடத் தண்டிக்கத் தெரியாத அப்பிராணி! ஆனல் சிங்கத்திற்கு மாறுபாடாக நடந்தாலோ......... நமக்கேன் வம்பு? மீண்டும் ஆபத்து வந்தாலும் வரலாம்! யானை சட்டத்தைச் சரிபார்த்துமுடிப்பதற்குள் சிங்கம் மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிட்டால்...! அல்லது சட்டத்தால் தண்டிக்கப்பட முடியாமல் அது தப்பிவிட்டால், எப்படியும் என்றைக்காவது ஆட்சியைப் பிடிக்காமலா போகும்? ஐயோ, நினைத்தாலே பயமாக இருக்கிறது! எதற்கும் சிங்கத்தையே ஆதரித்துவைப்போம்! அதிகாரம் மீண்டும் அதன் கையில் அகப்படாது என்றே வைத்துக் கொண்டாலும், பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லதுதானே? ஆதரித்து விடுதல் அதைவிட நல்லது!

யானையைப் பற்றிக் கவலையில்லை! அதன் ஆட்சியும் அப்படி ஒன்றும் பிரமாதமாக இல்லை! நீதிமன்றமே தன் சந்நதிக்கு வரும்படி சர்வாதிகாரியிடம் கெஞ்சிக் கொண்டல்லவா உள்ளது அதன் ஆட்சியில்! மேலும், அதன் உருவமே ஒன்ருகஇல்லையே! ஏதோ ஒட்டுப் போட்டது போல் பலவாருக அல்லவா தெரிகிறது! ஆனல் சிங்கமோ? தோற்றபின்னும் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறதே! நாம் மாறுபடுகிருேம் என்று தெரிந்தாலே தனக்கு வாய்ப்புக் கிடைத்ததும் நம்மை தண்டித்துவிடக்கூடும்! எனவே இவ்வளவு நாள் பொறுத்தது போதும் இனியும் இந்த விஷப் பரீட்சை வேண்டாம்—வாருங்கள் தோழர்களே நம் வாழ்வோடு சிங்கம் விளையாடாமலிருக்க இப்போதிருந்தே அதற்கு 'ஜே' போடுவோம்!

இப்படிப்பட்ட எண்ண அலைகளின் விளைவுதான் மீண்டும் சிங்கத்தின் பின்னலே ஒரு கூட்டத்தைச் சேர்க்கக் காரணம் என்பது இன்னும் யானைக்குப் புரியவில்லை. சிங்கத்திற்கோ மகிழ்ச்சி தாளவில்லை. யானையின் அறியாமையை எண்ணியவாறே அது கர்ஜிக்கிறது! அந்த கர்ஜனைக்குப் பொருள்தான் 'சூடு சொரணை இல்லாத ஜனதா தலைவர்கள் மாறமாட்டார்கள்' என்ற வாசகம்!

அரசியல் அமைப்பை விருப்பப்படித் திரிப்பதற்கும். அடிப்படையையே தகர்ப்பதற்கும் தண்டனையுண்டா? மாற்றத்தைச் செய்வதற்கு அரசியல் சாசனத்தில் ஒத்துக்கொள்ளப்படுகிற வழிமுறைகளே மேற்கொள்ளப்படும்போது ஒரு தண்டனையும் வழங்க வழியில்லை! அதைத்தான் அம்மையார் செய்துள்ளார்! இது கூடவா ஜனதாவுக்குப் புரியவில்லை?

சுற்றிவளைத்து எங்கே வந்தாலும் நான் சட்டத்தின் வழி காரியமாற்றினேன் என்று தான் முன்னுள் பிரதமர் சாதிக்கப்போகிருர்! அவர் வைத்ததே சட்டம் என்ருலும், நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் இன்றி நான் எதையும் செய்யவில்லை என வாதிட அவரால் இயலும்! பாராளுமன்றம் அவர்தம் ஆதிக்கத்திற்குப் பயந்து செயல்பட்டது என்ருல் அந்த ஆதிக்கமும் அந்த மன்றத்தின் சம்மதத்துடன் தாம் கைக்கொண்ட ஆயுதமே எனக் கூற அவருக்குச் சட்டத்தில் வாய்ப்பிருக்கிறது! இவரை எப்படி தண்டிக்கப் போகிறது ஜனதா அரசு? "சூடு சொரணை இல்லாத ஜனதாத் தலைவர்கள்...!"

கூரைக்கு நெருப்பு வைத்தவன் யாரென்று எல்லோருக்கும் தெரியும்! ஆனல் அவன் கிழித்துப் போட்ட தீக்குச்சி எங்கே என்று தேடிக்கொண்டு இருக்கிருர்களாம்! அந்தத் தீக்குச்சி என்கிற ஆதாரமில்லாமல் அவனைத் தண்டிக்க முடியாதாம்! இதைத்தான் இன்றைக்கு ஷா கமிசன் செய்து கொண்டிருக்கிறது?

ஆனல் சர்க்காரியா கமிசன் நிலை என்ன?

சர்வாதிகாரத்தை வீழ்த்திய பிறகு, சர்வாதிகாரியைத் தண்டிக்கும் (?) நோக்குடன் நியமிக்கப்பட்டது ஷா கமிசன், அந்தச் சர்வாதிகாரியால் தன் ஆதிக்கத்தை ஏற்க மறுத்த ஒரு ஜனநாயக இயக்கத்தை அரசியலில் களங்கப்படுத்தவும் பழி வாங்கவும் நியமிக்கப்பட்டது சர்க்காரியா கமிசன்! இது ஜனதாத் தலைவர்களுக்கு நன்கு தெரியும். அவர்களே ஒப்புக்கொண்ட உண்மை!

* * *

## அப்பாவி அய்யாசாமி !



எங்க, யார் போராட்டம் நடத்துனுலும் அவுங்களையெல்லாம் கருணுநிதிதான் தூண்டி விடுருருன்னு குத்தம் சொல்றதே நம்ப முதலமைச்சருக்கு வாடிக்கையாப் போச்சு! அப்படின்னு ஆளுங் கட்சியத் தவிர, மத்த எல்லாக் கட்சிகளும் கருணுநிதி சொன்னுக் கேட்டுச்சும்னு முதலமைச்சரே ஒத்துக்கிட்டதாதானே அர்த்தம்? பொது மக்கள் ஆதரவு கருணுநிதிக்குத்தான்னு சொல்லாம சொல்ருரே, அப்புறம் எதுக்கு இவரு முதலமைச்சரா இருக்கணும்?

* * *

## 'சாமியாரின் ஆலோசனை'

மத்தியப் பிரதேசத்திலிருக்கும் சாகர் என்ற நகரில் பெண் நர்சுகளுக்கான பயிற்சி நிலயம் ஒன்றுள்ளது. அங்கு ஒரு பெண் பயிற்சியாளரின் தங்க மோதிரம் காணமல் போகவே பயிற்சி பெற்று வந்த பிற பன்னிரண்டு பெண்கள் மீதும் சந்தேகம் விழுந்தது

திருடியவர் யார் என்று கண்டுபிடிக்க ஒரு சாமியார் வரவழைக்கப்பட்டார். அவர் ஒரு அபூர்வமான ஆலோசனை கூறினர்

பன்னிரண்டு பெண்களும் கொதிக்கும் நீரில் கைகளைவிட வேண்டும்; யார் திருடினரோ அவருடைய கை மட்டும் வெந்துவிடும்' இதுவே சாமியாரின் ஆலோசனை.

கட்டாயப்படுத்தப்பட்ட பன்னிரண்டு பெண்களும் கொதிக்கும் வெந்நீரினுள் கையை விட்டார்கள்; சாமியார் தொடர்ந்து 'மந்திரம் ஓதிக்கொண்டே இருந்தார்.

பாவம், அந்தப் பன்னிரண்டு பெண்களின் கைகளும் வெந்து தோல் உரிந்துவிட்டது.

இது குறித்துக் காவல்துறையினரிடம் புகார் செய்யப்படவே சாமியாரும், பெண்களைக் கட்டாயப்படுத்தியவர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

# அன்றும்-இன்றும்!

**"பூட்டோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது குறித்து தனது கருத்தை ஜனதா அரசு கூறவேண்டும்!"**

**—இந்திரா.**

**"வங்க தேசத்தில் ஷேக் முஜிபுர் ரஹ்மானும், அவர் இல்லத்தார் அனைவரும் படுகொலை செய்யப்பட்டபோது அன்றைய தலைமை அமைச்சராக இருந்த இந்திரா அனுதாபச் சொல் ஒன்றைக் கூடக் கூறவில்லை!"**

**—வாஜ்பாய்.**

ஜனதா. ஜனநாயகக் கற்புக் கடம் பூண்டது உண்மையானல், அந்தக் கற்பைக் காக்கப் போராடிய ஒரு கட்சிக்கு ஏற்பட்ட விழுப்புண்ணை ஆற்றியிருக்க வேண்டாமா? ஆற்ற விட்டாலும் பரவாயில்லை ஆறுதலாக நாலு வார்த்தை-நியாயத்தை உணர்ந்து. அதற்குப் பரிந்து பேசி இருக்க வேண்டாமா?

என் மீது ஒருவன் திருட்டுக் குற்றம் சுமத்துகிருன். குற்றம் சாட்டியவனை நீதியின் நெடிய படிக்கட்டிலே நிறுத்தி-என்னை உனக்குத் தெரியுமா? எப்போதிருந்து தெரியும்? நான் திருடியதைப் பார்த்தாயா? நீயாகச் சொல்லுகிருயா அல்லது எவரேனும் சொல்லிக் கொடுத்ததை வைத்து என் மீது பழி போடுகிருயா? எனக்கெதிரான ஒரு தவருன உள்நோக்கம் உனக்கு இருக்கிறது என்கிறேன். அதற்குப் போதிய ஆதாரம் என்னிடம் உள்ளது. நீ குற்றம் சாட்டியதற்கு என்ன ஆதாரம்? உன் சாட்சிகளைக் கொண்டு வா. அவர்களையும் நான் குறுக்கு விசாரணை செய்தாக வேண்டும்'—இதுபோலக் கேட்பதற்கு நிச்சயம் எனக்கு உரிமையுண்டு!

சர்க்காரியா கமிசன் நடைமுறையில் இந்த நியாய மரபுகளை நீதியின் அடிப்படைகளைப் புறக்கணித்தது! 'மிசா'வின் கொடிய கரங்கள், பொய்ச் சாட்சிகள் புனைவதைக் கூசாமல் கமிசன் அனுமதித்தது! 'சட்டத்தின் வழி ஆட்சி' என்று ஜனநாயக நியாயம் பேசும் ஜனதா. நீதியின் இந்த நெறிதவறிய நடைமுறையைக் குறித்து இன்று வரை ஒரு வார்த்தை பேசவில்லையே; ஏன்?

# To the attention of Mr. FERNANDEZ

BY
**Dr. M. KARUNANIDHI**

The Honourable Central Minister Fernandes, who visited Madras recently, has told in a press conference that Karunanidhi knew well that Indira Gandhi was a fascist and as such he would not support her. There was no reason for my friend, George Fernandes, to forget that it was DMK, as a party, which opposed, first and fore-most, in the whole of India, the imposition of emergency during the regime of Indira Gandhi. It might be possible that he may not find time, in the midst of his multifarious preoccupation to ponder over it. Only those political opportunists are apt to forget the fact that it was DMK, the then ruling party in Tamil Nadu, which organised protest meetings, circulated hand bills through out the country and conducted anti-emergency conferences attended by lakhs of people, during the emergency period demanding the release of many of those, who are, now, either Ministers in the Janatha Government or leaders of the Janatha Party, when they were imprisoned under MISA. As I have immensed confidence in the memory power of the Janatha Leaders, I do believe that they have not forgotten all these. The then Central Government had also avertly accused the DMK party as well as the DMK Government that Tamil Nadu was an island which gave asylum to the leaders belonging to the Old Congress and the Socialist Party who went underground.

I cannot but mention one thing here. The DMK which vehemently opposed the emergency, directed its opposition in the most peaceful manner on the lines of Gandhi and Anna and it did not resort to any violent or virulent methods what so ever. The policy of DMK which was founded by ANNA is to undertake such activities bereft of violence for the furtherance of its ideas and ideals.

As the DMK felt that the emergency promulgated by Indira Gandhi, the attendant atrocities perpetrated by the officialdom, and the wicked and wild methods adopted by the CBI, in particular, to annihilate the opposition parties, are nothing but the revival of fascism, it fought to oppose the emergency strongly.

But what is the position prevailing at present?

The emergency that supports and nourishes fascism has been repeated now! There is no MISA! The Inquiry Commission, cases, the statements recorded from Officers under duress, the dubious and vicious manner, IAS Officers are turned approvers, the malicious activities with an ulttrior motive to destory a particular party all these still continue even in this JANATHA regime also.

BADAL was declared guilty by the Enquiry Commission appointed by Indira Gandhi Government and he was also conceived in a court of law. But at the time of his preferring an appeal the Janatha Government was installed at the Centre and Badal's case was withdrawn. Now he is the Chief Minister of Punjab.

The Central Government has publicly announced that all those cases and enquiries were initiated by the then Fascist Government and as such no action need be taken. The Enquiry Commission and the resultant cases poisted on the DMK people were also initiated during the very same Fascist regime.

They demand justice for themselves at the same time it is denied to others—should it be the Policy of the Central Government?

The enquiries and cases on Badal were constituted during the Fascist rules. Is it the argument of the Central Government that the enquiries and cases on DMK wert not instituted during the Fascist regime?

The actions of the then Central Government through out India were unjustfiied and atrocities. But do the Central leaders feel that the action against DMK alone are justified and Lawful?

But brother, I am not writing this because I am afraid of such enquiries and cases.

I am pointing out this to my friend Fernandes to remind him that those, who preach justice and fair-play to the world at large should turn back and look at themselves once.

Let me say something about Fascism to my friend J. P. Morarji, Asok Mehta and Fernandes all these leaders were dubbed as Fascists and during the period of emergency, anii fascist conference were conducted in Tamil Nadu. If we turn over the leaves of the old newspapers, you will come to know that the present Chief Minister of Tamil Nadu, Mr. M. G. Ramachandran has participated in those conferences and vehemently hurled accusations on the present Janatha leaders calling them murderers, and fascists

I read a news item describing Fernandes as saying that MGR is his friend and that Karunanidhi is also a friend!

These words of George Fernandes are fine examples which go to prove that how changes are taking place in politics and how they become indispensable.

What other explanation shall I present beyond this?

I would like to state emphatically that the DMK under any circumstances, will not hesitate in its efforts to save democracy and in its continuous struggle to achieve implementation of the policies enunciated by Anna on State Autonomy, language, social and economic front and it will not abdicate its lofty ideals to such alliance with any one.

Fascism and Nazism—these are not to be understood by mere words, but to be reckoned from deeds. Fascism and Nazism may survive in the garb of democracy. The DMK desires to keep a close and constant vigil and thwart it.


★★★★★-★★★★★★

## திருமணம்

நாளது திருவள்ளுவர் ஆண்டு 2009 சித்திரைத் திங்கள் 3ஆம் நாள் 16-4-1978) ஞாயிறு காலை 9-30 மணியள வில் செல்வன் டி. நாராய ணன் (நம்நாடு) பி எஸ் ஸி, க்கும் செல்வி கமலாவுக்கும் பெருநகர் மணமகள் இல் லத்தில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் சமு கப்பொருளாளர் திரு சாதிக் பாட்சா அவர்கள் முன்னிலை யில் திருமணம் நடைபெ றும்

★★★★★-★★★★★★

### ராணுவத்தை சந்திக்கிறார்!




திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் சென்னை 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B, அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009.